

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மாசி- பங்குனி
மார்ச் - 2021

மலர் 10 இதழ் 3

## பொருளடக்கம்


| | |
|---|---|
| வண்டு ஸ்தோத்ரம் | 3 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 5 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 10 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ப்ரபோத சிந்தாமணி | 14 |
| உலக க்ஷேமம் | 16 |
| ஸ்ரீ மடம் நிகழ்ச்சிகள் | 21 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 25 |
| பங்குனி மாத விசேஷ தினங்கள் | 28 |
| ஆசாரக் கோவை | 29 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 32 |
| புராணக்கதை | 34 |
| வேதாந்த ஸாரம் | 36 |
| மகாபாரத சுருக்கம் | 37 |
| அத்வைத வினா - விடை | 39 |
| கர்மபலன் | 41 |
| ஸ்ரீ பாகவதம் காட்டும் வாழ்க்கை நெறி | 43 |
| தத்வ சிந்தனை | 45 |
| ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள் | 47 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்








ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.


Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्ग दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# வண்டு ஸ்தோத்ரம்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



### ப்ரார்த்தனை ஈடேறாமையும் நாஸ்திகமும்

நாம் ப்ரார்த்தனை பண்ணுவதெல்லாம் நமக்குக் கிடைத்து விடுறதா என்ன? இல்லை: சில பிரார்த்தனை நிறைவேறுகிறது. சில நிறைவேறாமல் போகிறது. ஆனால் நிறைவேறவில்லை என்பதற்காக நாம் பகவானை விட்டு விடுவதில்லை. பக்தியை விட்டுவிடுவதில்லை. வேறே பலனுக்காக பக்தி பண்ணினாலும், ஏதோ நாம் செய்கிற துளிதுளி பக்தியிலும் அதற்கென்றே ஒரு ஸுகம் நமக்குத் தெரிவதால் நாம் வேண்டின பலன் கிடைக்கா விட்டாலும் பக்தியை விடுவதில்லை.

என்னிடமே ரொம்பப் பேர் வருகிறார்கள், ஏதோ ஒரு கஷ்டம்? தீரவேண்டும்?. பெண்ணுக்குக் கல்யாணம்? ஆக வேண்டும். பிள்ளைக்கு வேலை கிடைக்க வேண்டும்?, வ்யாதி போக வேண்டும், கேஸ் ஜயிக்க வேண்டும் என்று இப்படிப்பட்ட ப்ரார்த்தனைக்காக வருகிறார்கள். எல்லாருக்கும் எல்லா ப்ரார்த்தனையும் நிறைவேறுகிறதா இல்லை. ஆனாலும் அதற்காக அவர்களுடைய அபிமானம் போய் விடவில்லை. தொடர்ந்து வந்து கொண்டேதான் இருக்கிறார்கள். நாம் ப்ரார்த்திப்பதெல்லாம் நமக்குக் கிடைத்துத் தான் ஆக வேண்டும் என்று எதிர்பார்க்க நமக்கு அருகதையில்லை என்று உள்ளூர நமக்கே ஏதோ ஒரு தினுஸில் தெரிந்திருக்கிறது. அதனால் நம் ப்ரார்த்தனை நிறைவேறாவிட்டாலும் பகவானை விடுவதில்லை,

ப்ரார்த்தனை நிறைவேறுவதற்காக நாஸ்திகர்களாகப் போகிறவர்கள் ரொம்பக் குறைச்சல்தான். அநேகமாக ஸ்வாபாவிகமாகவே (இயற்கையாகவே) தான் நாஸ்திகர்கள் அப்படியிருக்கிறார்களே தவிர, பக்தி பண்ணினதால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்கிற தாபத்தால் நாஸ்திகராவதென்பது ரொம்பவும் அபூர்வம்தான். லௌகிகமான பலனை உத்தேசித்து ஏதோ கொஞ்சம் பக்தி பண்ண

ஆரம்பித்துவிட்டால்கூட ஸரி, அது ஒருபோதும் அழிந்து போய்விடுவதில்லை வளராமல், பக்வமாகாமல் வேண்டுமானால் போகலாம். ஆனால் அடியோடு இல்லாமல் போய்விடுவதில்லை.

இதனால்தான் க்ருஷ்ண பரமாத்மா, ''நீ ஞானியாகவோ, ஜிஜ்ஞஸுவாகவோ இல்லாவிட்டாலும் ஸரி; ஆர்த்தனாகவே அர்த்தார்த்தியாகவோ தான் என்னிடம் வருகிறாயா ? அதுவும் ஸரி, ஏதோ காரணத்துக்காக என்னை நம்பி வந்துவிட்டாய் அல்லவா அதனால் நீயும் பக்தன்தானப்பா'' என்று பரம கருணையோடு இவர்களையும் பக்தர்களோடு சேர்த்துக் கொள்கிறார்.

## ஆத்ம ச்ரேயஸுக்கான ப்ரார்த்தனை

லௌகிகத்தில் நமக்கு எந்த ப்ரார்த்தனை இருந்தாலும் இல்லாவிட்டாலும், ''நமக்கு ஒரு குறையுமில்லை; ஒன்றுக்காகவும் நாம் ப்ரார்த்திக்க வேண்டியதில்லை'' என்ற நிறைந்த நிலையை நாம் நிஜமாக அடைகிறவரை ஆத்ம ச்ரேயஸுக்கானவற்றை பகவானிடம் ப்ராத்தித்துக் கொண்டிருந்தால் அப்படி ப்ரார்த்திப்பதே நமக்கு ஓரளவு தாப சாந்தியாக இருக்கும். நம் ஆத்மவ்ருத்திக்கு ஏதெது தேவை என்று பகவானுக்கே தெரியும். நாம் கேட்காமலே அவன் கொடுப்பான் என்பதெல்லாம் வாஸ்தவமானாலும்கூட, நம் குறைகளை அவனிடம் நாமே வாய்விட்டுச் சொல்லிக் கொள்வதில் நமக்கு ஒரு ஆறுதல் கிடைக்கத்தான் செய்கிறது. இந்த ரீதியில் நாம் ஆத்ம ச்ரேயஸுக்காக என்னென்னவற்றை ப்ரார்த்திக்க வேண்டும் என்பதை ஆசார்யாள் ஷட்பதீ முதல் ச்லோகத்தில் சொல்கிறார்.

ஸுப்ரஹ்மண்ய புஜங்கத்தில் நம் ஆசார்யாள் செந்தில்நாதனுடைய பத்ரவிபூதி மஹிமையில் ஸகல வ்யாதிகளும் தீருவதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். அங்கே ஆர்த்திக்காகக் கூட அவரே பக்தி பண்ணிக் காட்டுகிறார். கனகதாரா ஸ்தவத்தை எடுத்துக் கொண்டால் அங்கே ஆச்சார்யாள் அர்த்தார்த்தியின் வேண்டுதலைக்கூட ஒப்புக் கொள்கிற மாதிரி மஹாலக்ஷ்மியிடம் தத்யாத். த்ரவிணாம்புதாராம் மேகம் மழையை வர்ஷிக்கிற மாதிரி செல்வ தாரையைக் கொட்டு என்று ப்ரார்த்திக்கிறார்.

ஆனால் இந்த ''ஷட்பதீ ஸ்தோத்ர''த்தில் ஆர்த்தனாகவும், அர்த்தார்த்தியாகவும் இல்லாமல், ஞானத்தை விரும்புகிற ஸாதகனான ஜ்ஜ்ஞாஸு எப்படி ப்ரார்த்தனை பண்ணுவானோ அப்படியே பண்ணச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# திரௌபதி



### பெண்ணினால் வந்த விளைவு

குந்தியின் கட்டளைப்படியும் வியாசரின் விளக்கத்திற்கேற்பவும் பாண்டவர் ஐவரும் திரௌபதியை மணந்தனர். யுதிஷ்டிரனை மணந்தபின் தீக்குளித்து அடுத்த நாள் பீமனை மணந்தாள். மீண்டும் தீக்குளித்து அர்ச்சுனனை மணந்தாள். இவ்வாறு ஐவரையும் மணந்த பின்னர் நாரத முனிவரின் உபதேசத்தால் பாண்டவர்கள் தங்கள் வாழ்க்கை முறையை வகுத்துக் கொண்டனர். ஒவ்வொருவரிடமும் ஓராண்டு முறையாக வசித்த பின்னர் எரிபுகுந்து அடுத்தவருடன் வாழ்வதாகவும், கணவனைத் தவிர மற்ற நால்வருக்கும் அவள் தன் தமையனின் அல்லது தம்பியின் மனைவி என்ற நினைவே இருக்குமென்ற நியதி அமைந்திருந்தது.

திரௌபதியின் வாழ்க்கை முழுவதும் தொடக்கத்தில் இன்பமயமானதாக அமையவில்லை. சுயம்வரத்தில் அர்ச்சுனன் வில் வளைக்கும் போட்டியில் வெற்றியடைந்ததும், துரியோதனாதியர் அந்தண வடிவில் இருந்த பாண்டவரைத் தாக்கி தோல்வி கண்டனர். அவர்கள் ஐவரும் பாண்டவர்கள் என்றறிந்ததும் மீண்டும் ஹஸ்தினாபுரத்தில் இருந்து படையெடுத்து வந்தனர். இம்முறையும் துரியோதனன், துச்சாஸனன், சகுனி, கர்ணன், ஜயத்ரதன் ஆகிய ஐவரும் தோல்வியுற்று ஓடினர்.

துரியோதனாதிகளின் தந்தையான திருதராஷ்டிரன், பீஷ்மர், விதுரர் போன்ற பெரியோர்களின் வற்புறுத்தலால் இராஜ்ஜியத்தின் ஒரு பகுதியான காண்டர்வ பிரார்த்தனை ஆளும்படி யுதிஷ்டிரனை அனுப்பினான். கண்ணனின் உதவியினால் பாண்டவர்கள் காட்டைத் திருத்தி இராஜசூயம் என்னும் பெரும் வேள்வியை இந்திரப் பிரஸ்தம்

என்னும் மிக அழகிய நகரில் செய்தனர். பல நாடுகள் அப் பேரரசில் அடங்கின.

வேள்வியைக் காண வந்த துரியோதனன் மயன் அமைத்த மாளிகையில் உலாவச் சென்றான். அங்கு நீர் நிலை என்று எச்சரிக்கையாகச் சென்ற இடம் பளிங்குக்கல் தரையாக இருந்தது. அடுத்து பளிங்குகல் என்று நினைத்துச் சென்ற இடம் நீர் நிலையாக இருக்கவே அவன் தடுமாறி விழவும் அதனை கண்ணுற்ற திரௌபதியும் பிற மகளிரும் நகைத்தனர். துரியோதனன் பொறாமைக் கனலுடன் திரும்பினான்.

ஹஸ்தினாபுரத்தை அடைந்த துரியோதனன் மாமனான சகுனியுடனும் தம்பியான துச்சாசனனுடனும் கர்ணனுடனும் சூழ்ச்சியில் இறங்கினான். அதன்படி அற்புதமானதொரு சபாமண்டபத்தைக் கட்டுவித்து அதைக் காணும் பொருட்டு பாண்டர்களை அழைத்து அங்கு யுதிஷ்டிரனைத் தந்திரமாகக் சகுனியுடன் சூதாடச் செய்தான். வஞ்சகக் கவராடலில் வல்லவனான சகுனி யுதிஷ்டிரனை வென்று கொண்டே வந்து நாட்டைக் கவர்ந்தது மட்டுமின்றிப் பாண்டவர் ஐவரையும் திரௌபதியையும் பந்தயமாக வைத்துத் தோற்கச் செய்தான்.

இந்த வாய்ப்பிற்காகக் காத்திருந்த துரியோதனன் தன் தம்பி துச்சாசனனை ஏவி, திரௌபதியைத் தலை முடியைப் பிடித்துச் சபைக்கு இழுத்து வரச் செய்தான். அப்போது சூதில் தன்னைத் தோற்றபின் அவளைத் தோற்றாரா அல்லது அதற்கு முன்பா என்று சபையில் பெரியோர்களை நீதி கேட்டு ஏமாந்த அவள் தன் கணவர் ஐவரும் கட்டுண்ட நிலையில் இருப்பதைப் பார்த்து துச்சாஸனன் உடன் நிகழ்ந்த போராட்டத்தில் கைகளை சேர்த்து, உடல் சோர்ந்த நிலையில் ''கோவிந்தா கோவிந்தா'' என இரு கரம் கூப்பி வேண்டினாள். வசிஷ்டரால் அவளுக்கு உபதேசிக்கப்பட்ட நாமம் அவளது நாவில் ஊறி நெஞ்சைக் குளிர வைத்தது. அம்மட்டோ.! தேவர்கள் அனைவரும் அன்றாடம் ஆயிரம் நாமங்கள் கூறி வழிபடும் அப்பரந்தாமன் திரௌபதிக்கு மட்டும் தெரியுமாறு தோன்றி அருள் புரிந்தான். சேலை, இழுக்க இழுக்க வளர்ந்தது. கோடிச் சேலையாகவே (புதியதாகவே) கோடிக் கணக்காக வந்து வீழ்ந்தது. துச்சாஸனன் மயங்கி வீழ்ந்தான். தன் இடது துடை தட்டி அழைத்த துரியோதனனைத் திரௌபதி அந்தத் துடை பிளக்கப்பட்டு மரணமடவான் எனச் சாபமிட்டாள். தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள்.

உடனே யாக சாலையிலும் வீட்டின் மங்கல அறையிலும் அபசகுனங்கள் ஏற்படுவதைக் கேள்வியுற்ற திருதராட்டிரன் மருமகளின் சாபத்திற்கு அஞ்சி பாண்டவரைத் தம் நகருக்குத் திரும்ப ஏகுமாரு திரௌபதிக்கு வரங்களை அளித்தான். ஆயினும் துரியோதனின் வற்புறுத்தலினால்

மீண்டும் சூதாட்டம் நடைபெற்று இம்முறை பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டிலும், ஓராண்டு கரந்துறை வாழ்க்கையிலும் செலவிட வேண்டுமென்றும் அப்போது தம் உருவம் கண்டுபிடிக்கப்பட்டால் மீண்டும் பன்னிரண்டு ஆண்டுகள் காடு செல்வதாகவும்? வினை விளைந்தது.

காடு சென்ற சிறிது காலத்திற்கெல்லாம் திரௌபதி யுதிஷ்டிரனை எதிரிகளைக் கோபிக்க வேண்டுமென்றும், பீமன் ஹஸ்தினாபுரத்தின் மீது படையெடுக்குமாறும் வற்புறுத்தினர். யுதிஷ்டிரன் அவர்களைச் சமாதானம் செய்தான்.

ஏறத்தாழ பத்து ஆண்டுகள் வனத்தில் கழிந்தன. கண்ணன் தன் இளைய மனைவி சத்யபாமையுடன் பாண்டவர்களைக் காண வந்தான். சத்யபாமை லட்சிய திரௌபதியிடம் வேண்டிக் கொண்டபடி திரௌபதி அவளுடைய அறிவுரையை பணிவுடன் ஏற்றுக் கொண்டாள்.

அந்நாளில் துரியோதனன் தன்னிடம் வந்த துர்வாச முனிவரை உபசரித்து திருப்தி செய்வித்தான். மேலும் அவரிடம் தன் தமையன் யுதிஷ்டிரனும் திரௌபதியும் புசித்து ஓய்வெடுக்கும் போது அவர்களுடைய இருப்பிடத்திற்குச் செல்லுமாறு வேண்டிக் கொண்டான். துர்வாசரும் அவ்வாறே செய்தார். யுதிஷ்டிரன் விருந்தினராக வந்த முனிவருக்கும் அவர்தம் சீடர்களுக்கும் அமுதளிக்க விரும்பினான். ஆனால் சூரிய பகவான் தந்த அக்ஷய பாத்திரமோ திரௌபதியும் உணவருந்தி விட்டதால் கவிஷ்க்கப்பட்டு விட்டது. இனி அதிலிருந்து அமுதைப் பெற இயலாமே என திரௌபதி வருந்திக் கண்ணனை தியானித்து முறையிட்டாள் கண்ணன் அங்கு தோன்றி தனக்கு பசி எடுப்பதாகவும் அஷய பாத்திரத்தைக் கொண்டு வரும் படி பணித்தான். கலங்கிய மனத்துடன் அக்கலத்தைக் கண்ணனிடம் காட்டினாள் திரௌபதி. அவளால் கழுவிக் கவிழ்க்கப்பட்ட அக்கலத்தில் ஒரு சோற்றுப் பருக்கை ஒட்டியிருந்தது. கண்ணன் அதையெடுத்து சிறிது நீருடன் பரம்பொருளான நாராயணன் திருப்தி அடையட்டுமென்று கூறி அருந்தினான். அதே சமயம் ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த முனிவரும் அவர்தம் சீடரும் பெரும் விருந்தொன்றினை உண்டது போன்று சிரமமடைந்து யுதிஷ்டிரன் இல்லம் செல்லாமல் வெளியேறி விட்டனர்.

சில நாட்கள் சென்ற பின்பு இந்து தேசத்து அரசரான ஜயத்ரதன் கானகத்துக்கு வந்தான். அப்போது பாண்டவர்கள் ஐவரும் வேட்டையாடச் சென்றிருந்தனர். திரௌபதி தனியாக இருந்ததைக் கண்டு அவள் பேரழகில் மயங்கி முன்பு சுயம்வரத்தில் தோற்ற ஜயத்ரதன் அவளை வலுக் கட்டாயமாகக் கவர்ந்து செல்ல இழுத்தான். அவனை துச்சமாகப் அவனை உதறிவிட்டு அங்கே வந்த புரோகிதரான

தௌமியரிடம் தன்னைக் காக்கும்படி வேண்டி விட்டு ஜயத்ரதனிடம் தன் கணவர்மார்களிடம் அவன் பெறப் போகும் தண்டனையைப் பற்றி எச்சரித்து விட்டு அந்த மாதரசி இரதத்தில் தானே கொண்டாள். சிறிது நேரத்தில் பஞ்ச பாண்டவார்களால் ஜயத்ரதன் பிடிக்கப் பட்டு பீமனிடம் தோல்வியுற்று அவமானப்பட்டு ஓடினான்.

மார்க்கண்டேய முனிவரிடம் இவ்வாறு திரௌபதி அடைந்த இன்னல்களை விவரித்த யுதிஷ்டிரனிடம், முனிவர் சீதை மற்றும் இராமருடைய காட்டு வாழ்க்கையை ஒப்பிட்டுக் காட்டி, முடிவில் வெற்றியும் நல்வாழ்வும் ஏற்படுமென்ற நம்பிக்கையை ஊட்டினார். மீண்டும் யுதிஷ்டிரன் சூதாட்டத்தில் தனக்கு ஏற்பட்ட தோல்வியில் இருந்து திரௌபதியே தங்கள் மானத்தைக் காத்தவள்; அவள் ஏன் வருந்த வேண்டும் என்று அம்முனிவர் சாவித்திரி என்ற பத்தினியின் சரித்திரத்தைச் சொல்லித் தேற்றினார்.

பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் கழிந்த போது, பாண்டவர்கள் மாறு வேடங்களில் விராட நகரத்தில் அரசனிடம் ஓராண்டு காலத்திற்கு ஊழியர்களாக அமர்ந்தனர். தருமன் கங்கபட்டர் என்ற அந்தணக் கோலத்துடனும், பீமன் பலாயணன் என்ற சமயற்காரனாகவும் அருச்சுனன் பேடி வடிவத்தில் பிருகன்னளையாக அரசகுமாரிக்கு நடனம் (இசை பயிற்றுவிப்பவனாகவும் நகுல சகாதேவர் ஆநிரை மற்றும் குதிரைகளைக் காக்கும் ஏவலர்களாகவும் அமர்ந்தனர். சைரந்திரி என்ற கோலத்தில் திரௌபதி அரசகுமாரி உத்திரையின் தோழியாகவும் பணிப் பெண்ணாகவும் ஆனாள். அரசனின் தம்பியாக கீசகன் என்ற படைத்தலைவன் திரௌபதியை காமுற்று அவளுக்குத் தொந்திரவு செய்தான். பீமனிடம் இரகசியமாக திரௌபதி முறையிடவே பீமன் கீசகனைக் கொன்றான். எஞ்சியிருந்த ஒருமாத காலத்தையும் திரௌபதி மிகுந்த சஞ்சலத்துடன் கழித்தாள்.

பாண்டவர்கள் தங்கள் இராஜ்யத்தைத் திரும்பிப் பெற வேண்டிக் கண்ணனைத் துரியோதனனிடம் தூதனாக அனுப்பிய போது திரௌபதியும், நகுல சகாதேவர்களும் துரியோதனனைப் போர் செய்தே அடக்கி நாட்டைத் திரும்பப் பெற வேண்டுமென்றும் அப்போதுதான் தாங்கள் செய்திருந்த கொடிய சபதங்களை நிறைவேற்ற எதிரிகளைக் கொன்றிடும் வாய்ப்புகள் கிடைக்கும் என்று வற்புறுத்தினர். தருமனிடம் சமாதானத்தை ஏற்படுத்த இயன்ற வரையில் முயல்வதாகக் கூறிய கண்ணன் திரௌபதியிடம் அவளுடைய சபதம் நிறைவேறும் நாள் வரும் என்று உறுதியளித்தான்.

பாரதப் போர் பதினெட்டு நாட்களுக்கு நடந்தது. பேரழிவு ஏற்பட்டு கொடிய

துரியோதனாதிகள் அழிந்தனர். கடைசி நாளன்று நள்ளிரவு துரோணரின் மகனான அசுவத்தாமன் திரௌபதியின் தம்பி திருஷ்டத்யும்னனையும் திரௌபதியின் ஐந்து புதல்வர்களையும் அவர்கள் துங்கும் போதே கொன்றான். சாகும் நிலையில் இருந்த துரியோதனனுக்குத் தன் செஞ்சோற்றுக் கடனைக் கழிக்கவும் திருதராஷ்டிரனின் புதல்வர்கள் முற்றாக அழிந்ததற்குப் பழிவாங்கவும் தன் பிதாவான துரோணர் திருஷ்டத்யும்னனால் கொல்லப் பட்டதற்கு வஞ்சம் தீர்க்கவும், இவ்வாறு செய்ததுமல்லாமல் அர்ச்சுனனின் மகனான அபிமன்யுவின் மனைவி உத்தரையின் கர்ப்பத்திலிருந்த சிசுவையும் அஸ்திரத்தால் தாக்கினான். திரௌபதி கண்ணனிடம் தன் ஐந்து மகன்கள் மரித்ததை விட உத்தரையின் கர்ப்பம் தாக்கப்பட்டதைக் குறித்து மிகவும் வருந்தி அக் கர்ப்பச் சிசுவைக் காக்கும்படி வேண்ட கண்ணன் அவ்வாறே செய்தான். மேலும் அவளுடைய வேண்டுகோளின்படி அசுவத்தாமனின் முடியிலிருந்த மணியைக் கொய்து அவளிடம் தந்துவிட்டு அவனை நாட்டை விட்டு துரத்தி விட்டான்.

போர் முடிந்து யுதிஷ்டிரர் தவறாமல் முப்பதாறு ஆண்டுகள் ஆட்சி செய்த போது திரௌபதி அவருக்கு உறுதுணையாக இருந்தாள்.

மிகக் கொடுமையான சோதனைகளிலும் மனம் தளராது நெறியும் தவறாது வாழ்ந்தவள் திரௌபதியாகக் கனவில் பிறந்த போது தூய்மையுடன் வாழ்ந்து சிறந்த சிரஞ்சீவி முனிவரான மார்க்கண்டேயரால் சீதையுடனும், சாவித்ரியுடனும் ஒன்றாகக் கருதப்பட்டவள் திரௌபதி.

## ஸனாதன தர்மப்புதிர்கள் மார்ச் வினாக்கள்

*1. திருப்பதி மலையின் அடிவாரத்தின் பெயர் ?*

*2. த்ரிருமலைக்கு படி வழியாகப் போகும் மார்க்கத்தின் பெயர்?*

*3. பஞ்சாயதன பூஜையில் வினாயகரின் மூர்தம் எந்த நதியில் கிடைக்கும்?*

*4. ஜமதக்னி முனிவரைக் கொன்ற அரசன் ?*

*5. பஞ்சாங்கத்தில் உள்ள இரண்டு கால மானம் ?*

*6. கூத்தபிரான் எனும் பெயருள்ள சிவ மூர்தம் உள்ள கோவில் ?*

*7. பூச நக்ஷத்ரத்தின் வடமொழிப் பெயர் ?*

*8. துளஸி தாஸரின் இயற்பெயர் ?*

*9. பழனியில் உல்ள முருகனின் மூர்த்தத்தின் சிறப்பு என்ன?*


*10. படியாய் கிடந்து உன்பவளவாய் காண்பேனோ'' சொன்னவர் யார்?*

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## துளசி விவாஹம்

*(திருமலையில் நடைபெற்ற துளசி விவாஹம் விழாவில் பெரியவா அருளியது)*



**ஶ்ரிய: காந்தாய கல்யாண நிதயே நிதயேர்திநாம்**

**ஸ்ரீ வேங்கடனிவாஸாய ஸ்ரீனிவாஸாய மங்களம்**

*தேஹி ஸௌபாக்கியம் ஆரோக்யம் தேஹிமே பரமம் ஸுகம்*

रूपं देहि जयं देहयिशो देहिद्विषो जही ।।

*ரூபம் தேஹி ஜயம் தேஹி யஷோ தேஹி த்விஷோ ஜஹி!!*

*இன்றைய கார்த்திகை மாசத்தில், த்வாதசி சமயம், திருமலை, திருப்பதி தேவஸ்தான தரப்பில், வைகானச சாஸ்திரம் பிரகாரம், இன்று துளசி விவாஹம் நல்ல முறையில் நடைபெறுகின்றது. நமது சனாதன ஹிந்து தர்மத்தில், சம்ஸ்காரம் என்பது முக்கியமானது.*

*நமது சரீரம், இறைவன் அருளால் கிடைத்த சரீரம், பவித்திர சரீரமாக, புண்ணிய சரீரமாக , சாத்வீக ஆலோசனை கலந்த சரீரமாக, மக்களுக்கு உபயோகமாக இருக்கும் சரீரமாக இருப்பதற்காக ஜாத கர்மா போன்ற சம்ஸ்காரங்கள், அன்னப்ராஷ்ணம், நாம கரணம் இது போன்ற சம்ஸ்காரத்தில் விவாஹம் முக்கியமான இடத்தில் உள்ளது. அந்த விவாஹம் செய்யக் கூடிய இந்த க்ஷேத்திரத்தில், ஸ்ரீனிவாச கல்யாணம் தினமும் செய்யக் கூடிய இந்த க்ஷேத்திரத்தில், துளசி கல்யாணம் என்ற இந்த காரியக் க்ரமம் சாதுர் மாஸ்யம் முடிவடையும் சமயத்தில், ஆஷாட மாசம் ஏகாதசி ஆரம்பித்த இந்த சாதுர் மாஸ்யம் விரதம், மத்தியில் பரிவர்த்தன ஏகாதசி, நேற்று உத்தான ஏகாதசி சமயம், முடிந்து விட்டது இந்த சாதுர் மாஸ்ய விரதம்.*

*இந்த சாதுர் மாஸ்ய விரதம் சமயத்தில், உத்தான ஏகாதசி சமயம், விஷ்ணு, துளசி விவாஹம் நடைபெறுகிறது. துளசி என்பது ஒரு மகத்தான திரவியம், வஸ்து. இந்த தங்கம், வைடூரியம் ஒரு பக்கம் இருந்தால் , துளசி மறு பக்கம் இருந்தால், துளசிக்கு மகத்துவம் அதிகம் என்று நமது புராணம் மூலம் நாம் தெரிந்து கொள்கிறோம்.ஆகவே*

பக்திக்கு உதாரணமாக, பக்தியே உயர்ந்தது என்பதற்காக உள்ள திரவியம் இந்த துளசி. ஆரோக்கிய பிரதிநிதி. நமது வைத்திய சாஸ்திரம் படி இது முக்கியமானது. தீர்த்த பிரசாதம். ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள விஷ்ணு கோவில்களில் இந்த தீர்த்த பிரசாதத்தை ஸ்வீகாரம் செய்து கொண்டு, ஆரோக்கியம் ஐஸ்வரியம் அனைத்துக்கும் ஏற்றுக் கொண்டார்கள். இது நாம் பல விதமாக, பல தரமாக அனுபவித்துக் கொண்டு வரும் ஐஸ்வரியம்.

துளசி விவாஹம் இன்று செய்யப்படுகிறது. 1973ம் வருடம் காஞ்சி மகாஸ்வாமிகள், நம்முடைய குருவும் சேர்ந்து, கர்நூலில் இருந்து காஞ்சி வந்த சமயம் ஒரு கிராமத்தில் துளசி விவாஹம் செய்தது ஞாபகம் வருகிறது. பக்திக்கு ஆதர்ஷனம் துளசி. ஆரோக்கியத்தின் ஆதர்ஷனம் துளசி.

துளசி விவாஹம் பக்தி தாரா. துளசி என்பது பக்தி தாரா. அநேக காலமாக பார்க்கிறோம், காசி விஸ்வநாதர் கோவிலில் அபிஷேக தாரா பார்க்கிறோம். பாலபிஷேகம், பஞ்சாமிர்த அபிஷேகம், தைலாபிஷேகம் பார்க்கிறோம். இது பக்திதாரா. இதற்கு பிரபலமானது துளசி.

பக்தியே நமது மனுஷ ஜன்மத்தில், ப்ரஷாந்ததிற்கு காரணம். வெறுப்பு, பொறாமை இல்லாத வாழ்க்கைக்கு. சுகமாக, சாந்தமாக வாழ்க்கை செல்ல காரணம். இவை அனைத்திற்கும் பக்தியே காரணம். குடிசை முதல் உயர்ந்த பவனம் வரை, மனதில் பக்தியே உள்ளது. பக்தியே காரணம். பிரசன்னமாக உள்ளது.

ராமாயணத்தில் கூறப்படுகிறது रमणीयं प्रसन्नाम्बु सन्मनुष्यमनो यथा ।। -அந்த நதி நீர் ஸ்பஷ்டமாக உள்ளது, சுத்தமாக உள்ளது, பிரசன்னமாக உள்ளது என்று கூறும் போது -சத் மனுஷ்ய மனோயதா என்று கூறப்படுகிறது. மனிதர்களில் நல்ல மனிதர்களின், ராக த்வேஷம் இல்லாத மனிதர்கள் போல் உள்ளது என்று உதாரணம் கூறினார்கள். அந்த மாதிரி பக்தி, நம் தேசத்தில் நம் ஒவ்வொரு வீட்டிலும் இந்த துளசி பூஜை தொடங்க வேண்டும் என்று கூறினார்கள்.

***வித விதமான ஆசாரங்கள் - வீட்டில் மஞ்சள், குங்குமத்துடன் அத்துளசிக்கு நீர்ஊற்றி, ஆரத்தி காண்பித்து, பிரதக்ஷணம் செய்து, குடும்பத்தில் இருக்கும் அனைவருக்கும் நல்லது நடக்க வேண்டும் என்று ஒவ்வொரு கிராமத்திலும் தொடர்ந்து வரும் நமது பரம்பரை, நமது சனாதன இந்து பரம்பரை போது, கனகதாரா மழை வந்தது. தங்கம் என்பது சுத்தம், வளர்ச்சி, சமிர்த்திக்கு உதாரணம்.***

பல பல தேசங்களில் சரித்திரம், நல்ல ஆசரணம், அபிவிருத்தி, சமுதாயத்தின் வளர்ச்சி- மனசு, சரீரம், புத்தி நல்ல வளர்ச்சி ஏற்பட, நமது தேசம், நமது தர்மம், நமது சமாஜம் கூட பத்திரமாக இருக்க , வைகாசன சாஸ்திரம் மூலம் வேத ரூபமாகவும்,ஸ்லோக ரூபமாகவும், அஷ்ட திக் பாலகர்களுக்கு பூஜை செய்கிறீர்கள். இந்த மண்டபத்தை புனர்நிர்மாணம் செய்து, சாஸ்திரம், சிற்பம், சிலை நிர்மாணம் செய்து, இந்த வசந்த மண்டபத்தில் இது நடை பெறுகிறது என்பது ஒரு நல்ல விஷயம். இந்த மண்டபத்தில் அஷ்ட திக்பாலர்கள் ஸ்தாபித்து உள்ளார்கள். நம்ம சாஸ்திரத்தில் திரம் நல்ல சாஸ்திரம். நம்முடைய சமாஜம் சரித்திரம் படைத்த சமாஜம். இதை நமக்கு சொல்வதற்கு புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தி , SVBC புது technology பயன்படுத்தி, அனைவரும் தெரிந்து கொள்ளும் பொருட்டு , இந்த நல்ல காரியத்தை, கார்த்திகை மாதத்தில் பதினெட்டு புராணம் மாதிரி புத்தகங்களை மஹா காஞ்சி ஸ்வாமிகள் தெலுங்கு மொழியில் பிரசுரம் செய்து உள்ளார்கள். அந்த மாதிரி புராணங்களில் அவருக்கு ஒரு ஸ்ரத்தை, பிரேமை.

அதன் சாரம் என்னவென்றால், ‘‘**பரோபகார புண்யாய**’’. பதினெண் புராணத்தின் சாரம். பகவான் ஸ்ரிஷ்டியில் அனைவருக்கும் ஒரு சக்தி, சாமர்த்தியம் கொடுக்கிறார். சிலருக்கு பேச்சும் திறன், சிலருக்கு ஞாபக சக்தி, சிலருக்கு உடல் சக்தி . அந்த சக்தியை மக்களின், சமுதாயத்தின் உதவிக்காக பயன்படுத்த வேண்டும். அதுவே ஒரு தாத்பரியம், சாரம். அதற்கே இத்தனை பண்டிகைகள், உற்சவங்கள், விரதங்கள், விழாக்கள் செய்கின்றோம். மனதிற்கு பக்குவம் தேவை. நாம் பிரசாதம் மூலம் அன்னத்தை பரிபக்குவம் செய்கின்றோம். மனது பரிபக்குவம் செய்வதற்கு ஒரு நாளில் செய்ய முடியாது. ஆகவே அனைவரும் நல்ல நட்பு முறையில் கூடி, சித்திரை மாதம் முதல் பங்குனி மாதம் வரை உள்ள பண்டிகைகளை நாம் கொண்டாடுகிறோம். அதனால், நமது மனதில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. சுத்தம் ஏற்படுகிறது-பொறாமை இல்லாமல், ஆத்மிக மாற்றம் ஏற்பட வேண்டும். தாரிதிர்யம் இல்லாமல் இருக்க, நல்ல பூஜைகள் செய்ய வேண்டும், துளசி பூஜை இம்மாதிரி செய்து, வீடு வீடாக பூஜை செய்து, அனைவரும் பொட்டு வைத்துக் கொண்டு, திலகதாரணம் செய்து, முக்கியமான நித்திய ஆசாரம் என்பது-கோலம் போடுதல், திலக தாரணம், தீபம் ஏற்றுதல் - ஆகிய நல்ல காரியங்களை செய்து ; சேவை மார்கங்களில் சென்று- சிறிய சேவை, பெரிய சேவை என்று இல்லாமல், நமது மனது பிறரின் கஷ்டங்களை துடைக்க சங்கல்பம் செய்து , நமது சக்திக்கு தகுந்தாற்ப் போல், சேவா காரியங்கள் ஒவ்வொரு வீட்டிலும் செய்யலாம். ஒரு பசுக்கு நாம் உணவு தரலாம், பிடி அரிசி திட்டம் என்றார்கள். பெரியது, சிறியது என்று ஒன்றும் இல்லை. மனது தயாள மனமாக இருக்க வேண்டும். அம்மாதிரி மனம் இருக்க, வியாச மகரிஷி இயற்றிய பதினெட்டு புராணங்கள் கூட, லௌகீகமாக

இருந்தாலும், தார்மீக வழியில் செல்ல, இங்கு இருக்கும் பாரதீயர்களும் சரி, வெளிநாட்டில் இருக்கும் பாரதீயர்களும் சரி, இந்த நல்ல நல்ல காரியங்கள் செய்ய வேண்டும். இந்த கார்த்திகை மாதத்தில் ஸ்கந்த புராணம், பத்ம புராணத்தில் இருந்து நல்ல விஷயங்களை கிரஹித்து, இவர்கள் கபில தீர்த்தம் மற்றும் வசந்த மண்டபத்தில்- **சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு: விஷ்ணோஸ்ச ஹ்ருதயம் சிவ** -என்று தத்துவத்தை மனதில் பெற்றுக் கொண்டு பூஜைகளை நன்றாக செய்கிறார்கள். அஸ்வத்த பூஜை என்று செய்தார்கள். காம்போடியா தேசத்தில் செடிகளைப் பற்றி நன்றாக சொல்லப்படுகிறது. இதை யாரும் வெட்டக் கூடாது. இதை அனைவரும் காப்பாற்ற வேண்டும் என்ற அரசாணையில் கூறப்படுகிறது. ''**மூலதோ பிரம்ம ரூபாய, மத்யதோ விஷ்ணு ரூபிணே, அக்ரத சிவரூபாய விருக்ஷராஜாயதே நமஹ**'' என்று பல இடத்தில் தீர்த்த ராஜா என்று கூறுகிறார்கள். கருடாழ்வாரை மிருக ராஜா என்று கூறுகிறார்கள். அதை பட்சி ராஜா என்கிறார்கள். அதான் நமக்கு வ்ருக்ஷ ராஜா முகம் உள்ள துளசியை திங்கள் கிழமை, அமாவாசை அன்று பிரதக்ஷிணம் செய்தால் நல்லது ஏற்படுகிறது. மூன்று லோகத்தையும் சுற்றிய பலன் நமக்கு வருகின்றது. நமது தர்மம் பரந்த தர்மம். விஷ்ணு என்பது வியாபகம் என்று பொருள். நமது தர்மம் எங்கும் பரந்த தர்மம். அனைவருக்கும் நல்லது செய்யும் தர்மம். இதை காப்பாற்ற, அநேக விரதங்கள் விவரமாக உள்ளது. நமது தர்மங்களில் விஷயம் உள்ளது. எனினும் அதை விநியோகம் செய்ய வேண்டும். அதை மற்றவர்களுக்கு எடுத்து செல்ல வேண்டும். Presentation, Distribution இரண்டிற்கும் அவசியம் உள்ளது. அதன் மூலம் அனைவருக்கும் சந்தோஷம், சுகம் கிடைக்க வேண்டும். மனதில் சாந்தி கிடைக்க வேண்டும். அனைவரும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். இந்த கார்த்திகை மாதத்தில் எந்த பிரஜைகளுக்கு என்ன வேண்டும் என்பதை யோசித்தால் , இந்தமாதம், அனைத்தையும் அருளும் மாதமாகும்-சந்ததியர்கள் சம்ரக்ஷணம், ஆரோக்கியம், ஐஸ்வரியம். நமது சமுதாயம், நமது தேசம் காப்பாற்ற, வெங்கடேச சுவாமியை பிரார்த்தனை செய்து , துளசி விவாஹம் காரியக்க்ரமம் மக்களின் மத்தியில் நல்ல ச்ரத்தை, நல்ல பக்தியை கொண்டு வந்துள்ளது. இந்த மாதிரியான கல்யாண காரியங்களை

**ப்ரிய: காந்தாய கல்யாண நிதயே நிதயேர்திநாம்**
**ஸ்ரீ வேங்கடனிவாஸாய ஸ்ரீனிவாஸாய மங்களம்**

என்று நமது தர்மம், வேத சாஸ்திரம், ஆகமம், சிற்ப சாஸ்திரம் , அறுபத்தி நான்கு கலைகளை காப்பாற்ற, கடவுள் நமக்கு சக்தி, தைரியம் தரம் வேண்டும் என்று கோரி, இந்த காரியம் நிறைவடையட்டும்.

# ப்ரபோத சிந்தாமணி

ஆயுஷ்மன்

**அதோ அத; பஸ்யத: கஸ்ய மஹிமா நோபசீயதே**
**உபர்யுபரி பஸ்யந்த: ஸர்வ ஏவ தரித்ரதி ।।**

*கீழே கீழே தாழ்ந்தவனாக பார்ப்பவனுடைய மகிமை பெருகும். தன்னை மேலே உயர்த்திகொண்டு பார்ப்பவன் எப்போதும் தரித்ரனே'' இந்த ஸ்லோகம் ஓர் ஐயத்தை ஏற்படுத்தும் என்று எண்ணுகிறேன்.*

*எப்போதும் உயர்ந்த எண்ணம் எண்ண வேண்டும், உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்னும் வள்ளுவர் வாக்குக்கும் முரண்படுவது போல இருக்கிறது. எது உண்மை? என் மனதில் இந்த ஐயம் எழுந்தது. விடையும் ராமாயணம் மூலம் கிடைத்தது.*

*மனிதனுக்கு பல விதமான சக்திகளைக் கொடுத்துள்ளார் இறைவன். அதை அவன் சரியாக பயன்படுத்துகிறானா என்றால் இல்லை என்னும் பதில்தான் வரும். சரியான சமயத்தில் லோகோபகாரமாக வேலைகளைச் செய்பவர் இருக்கிறார்கள். அவர்களது பெயர் கூட தெரியாது. இன்னும் சிலர் இருக்கிறார்கள். ப்ரமாதமாக ஒன்றும் செய்திருக்க மாட்டார்கள்.*

*சுயப்ரதாபமும் தம்பட்டமும் தான் இருக்கும். இப்போது ''வாழ் நாள் சாதனையாளர்'' என்னும் பட்டம் ப்ரபலமாகியுள்ளது. 365 நாள் ஸ்வாசம் செய்வதே பெரிய சாதனை. அரசாங்கமும் பத்ம விருதுகளைக் கொடுத்தாலும் இன்னும் பல சாதனையாளர்கள் விவரம் தெரியவில்லை.*

*நம் நாட்டின் விஞ்ஞானி ஜகதீச சந்த்ர போஸ் ஐன்ஸ்டீனுக்கும் முன், மார்கோனிக்கும் முன் அவர்களுடைய சித்தாந்தங்களை சொன்னவர். தன்னைப் ப்ரபலப்டுத்திக்கொள்ள விரும்பாததால் அவருக்கு வரவேண்டிய பாராட்டுகள் வரவேயில்லை. இது அவருடைய தன்னடக்கம்.*

**ராமாயணம் சொல்லும் சேதியைப் பார்ப்போம்.**

*யுத்தகாண்டம் இறுதியில் ராமனை ப்ரம்மா நீயே பரப்ரம்மம், மஹா விஷ்ணு சர்வதேவதைகளும் நீயே என்று பலவாறு துதித்தாலும் அதற்கு ராமர் ''ஆத்மானம் மானுஷம் மன்யே தசரதாத்மஜம்'' நான் தாசரதியான் மனுஷன்'' என்று கூறுவார். பதினாலாயிரம் அரக்கர்களை ஒரே ஆளாக வதைத்தவர், கர தூஷணர்களை வதைத்தவர், மூலபல யுத்தத்தில் ராவணனை கதிகலங்க அடித்து வதைத்தவர். நான்*

*மனுஷ்யன் என்று தன்னடக்கத்துடன் கூறுவதுதான் அவரது மகிமை. அவருக்கு சஹாயம் இருந்தது. சாதிக்க முடிந்தது என்றும் கூறலாம் அவரது தூதன் ஆஞ்சனேயர் செய்யாத சாதனையா? கடலில் பல தடைகளைத் தாண்டி லங்கையில் ப்ரவேசித்து, அரக்கர்களை அழித்து, சீதாபிராட்டியை தர்சித்து, ராவணனுக்கு எச்சரிக்கை விடுத்து லங்காதஹனம் செய்து ராமரிடம் திரும்பியவர். சீதாபிராட்டி அசோக வனத்தில் அவரிடம் வானரர்களின் பலம் பற்றி கேட்பாள். அவர் அதற்கு அவர் எனக்குச் சமமானமாவர்களும் என்னைவிட பராக்ரமம் உடையவர்கள் தான் உள்ளனர்'' என்று தன்னடக்கத்துடன் விடை தருவார். அதுதான் அவரது மகிமை.*

*இதற்கு நேராக ஆரண்ய காண்டத்தில் சீதை தனித்திருக்க ராவணன் வர, உபசாரங்கள் செய்தபின் அவள் ஸ்ன்யாசியான நீங்கள் யார்? என்று வினவுவாள். அதற்கு அவன் நான்தான் ராவணன் லங்காதிபதி. மேருமலையை உடைப்பேன், சமுத்ரத்தை வற்ற அடிப்பேன் இப்படி தம்பட்டம் செய்து கொள்வான். இறுதியில் என்னவாயிற்று என்று தெரியும். உபர்யுபரி கர்வத்துடன் பார்த்தவன் அவன். அடக்கத்துடன் அதோ அத: பார்த்தவர்கள் மாருதியும் ராமசந்த்ர மூர்த்தியும். இந்த ப்ரபோதம் நமக்கு வர ப்ரார்த்திப்போம்.*

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன், ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்''

# உலக க்ஷேமம்

நவீன நாகரீகத்திற்காக நல்ல பழக்க வழக்கங்களை நாட்டு மக்கள் மறந்து விடுகின்றனர். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு வேண்டும். உண்ணும் உணவு தூய்மையாய் இருக்க வேண்டும்.

பிடி அரிசி திட்டத்தை தீவிரமாக செயல் முறைப்படுத்த நாட்டிலுள்ள சத் சங்கங்கள் முன் வரவேண்டும், வடக்கேயெல்லாம் கோதுமை, ஆட்டா மாவு போன்றவற்றை தங்கள் கைங்கர்யமாகப் போட்டு, இத்திட்டத்தை நல்ல முறையில் நடத்தி வருகின்றனர், இந்தத் திட்டம் உலக க்ஷேமத்திற்கானது.

**வைசுயம் அவசியம்**

முன் காலத்தில் எல்லாம் உணவு உண்பதற்கு முன்பு அதில் ஒரு பகுதியை மற்ற ஜீவன்களுக்கு (எறும்புகள் முதல் தேவர்கள் வரை) அர்ப்பணித்து விட்டுத்தான் உண்டனர். இலையில் உண்பதற்கு முன்பு சிறிது உணவை ஓரமாக வைப்பர். பின்னர் காக்கை, குருவி போன்றவற்றிற்கு அளிப்பர். இதற்கு வைசுயம் செய்தல் என்று பெயர். ஒரு காலத்தில் ' சாப்பாடு ஆச்சா?'' என்று கேட்பதற்கு ' வைசுயம் ஆச்சா?'' அதாவது' உணவு தர்மம் செய்தாகி விட்டதா?'' என்றுதான் கேட்பர். தற்போது உலகம் இருக்கும் நிலையில் வைசுயம் வைத்து சாப்படுவதில்லை.

வைசுயம் வைத்து மக்கள் உணவு உண்டு வந்தபோது நாடு ஸுபிக்ஷமாக இருந்தது. அது குறையக் குறைய நாடெங்கும் சண்டை சச்சரவுகளும், கலகமும் பெருக ஆரம்பித்து விட்டன. பூஜை, நைவேத்யம் ஆனதும் காக்கைக்கென்று ஒரு பிடி அன்னம் போடும் வழக்கம் இருந்தது. எந்தப் பொருளை பகவானுக்கு அர்ப்பணிக்கிறோமோ அந்தப் பொருளுக்கு பின்னர் குறைச்சலே இருக்காது. பகவான் பார்வை படும் பொருளெல்லாம் மதுரமாகவே இருக்கும். அந்த பொருளை உண்டாலும் வியாதியே ஏற்படாது. இவ்வளவு சிறப்பு மிக்க இந்த நைவேத்தியத்திற்கு தற்கால உலகில் இடமே இல்லாமல் போய்விட்டது. சமையல் செய்யும்போதே பாதியை சாப்பிட்டு விடுகின்றனர். முன்பெல்லாம் தாய்மார்கள் குழந்தையை இடுப்பில் தூக்கிக்கொண்டு ஏதேனும் நாய், போன்றவற்றை வேடிக்கை காட்டி ஒவ்வொரு பிடியாக குழந்தைக்கு ஊட்டுவர். நடு நடுவே நாய்க்கும், காக்கைக்கும் ஓரிரு பிடி போடுவர். இவ்வாறு குழந்தையின் சாதத்தில் ஒரு பகுதி ஒரு பிராணியின் பசியைப் போக்க பயன்பட்டது. இவ்வாறு ஊட்டப்பட்ட சாதம் தான் அந்த குழந்தையின் உடலில் ஒட்டும். புட்டிப்பால் வந்த பிறகு இதற்கெல்லாம் வழியில்லாமல் போய்விட்டது.

இந்த உலகில் சுய நலம் கொண்ட இனம் மனித இனம் மட்டும் தான். நாய், காக்கை போன்றவைகள் தங்களுக்கு எது கிடைத்தாலும் தங்கள் இனத்தாரோடு பகிர்ந்து உண்ணும். ஒரு அரிசி கிடைத்தாலும் 10 எறும்புகளாக சேர்ந்து உண்ணும். மனிதன் மட்டும் தான் அடுத்தவர்களுக்குக்கூட தெரியாமல் மறைத்து உண்ண முற்படுவான். இந்த மனோபாவம் மறைய வேண்டும். அசூயையும், ஆங்காரமும், குறுகிய மனப்பான்மையும் இருந்தால் நல்லதே வராது.

உணவு என்றால் நெல்லூர் அரிசியைத் தேடி அலைய வேண்டியதில்லை, இருப்பதை வைத்துக்கொண்டு நல்லபடி சமைத்து கடவுளுக்கு நைவேத்தியம் செய்து பிராணிகளுக்கு சிறிதளவு ஒதுக்கி வேளா வேளைக்கு கட்டுப்பாடுடன் உண்டால் போதும். நல்லதையே நினைத்து நல்லதையே செய்ய வேண்டுமானால் ஆகாரம் தூய்மையான தாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் வாழ்க்கையில் இன்பம் நிலைக்கும்.

அன்றாடம் நாம் பார்க்கும் பண்டங்களிலும் கலப்படம். நாம் நடந்து கொள்வதிலும் கலப்படம், சென்னை நகரில் சமீபத்தில் ஜலக் கஷ்டம் ஏற்பட்டது. அப்பொழுது நகரெங்கும் பரவலாக குழாய் கிணறுகளை இறக்கி, முடிந்தவரை நீரை உறிஞ்சி விட்டோம். ஜல மட்டம் மிக கீழே போய்விட்டது. எனவேதான் பிற்பாடு நல்ல மழை பெய்தபோதும் ஜலமட்டம் பழையபடி எங்கும் உயரவில்லை. 'பவரி' னால் இழுக்க சக்தி அடியோடு போய்விடுகிறது.

இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் பிடி அரிசி திட்டம்' என்ற ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. நவீன உலகில் மாறுதல்களுக்கேற்ப ஒருவன் உந்தித் தள்ளப்பட்டாலும், பழையவற்றை மனதில் கொண்டு ஒரு பிடி அரிசியை அவன் தினமும் எடுத்து வைத்தால் அதுவே அவனுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும். தானாக நல்ல சிந்தை வளரும். ஒரு பிடி அரிசி எடுத்து வைக்கும் போதே நல்ல நினைப்போடு அன்றாட அலுவல்களைத் தொடங்குகிறான். கடவுள் நினைப்பு தானாக வருகிறது.

**நம்பிக்கை முக்கியம்**


அவன் கொடுக்கும் அரிசி சமைக்கப்பட்டவுடன் கடவுளுக்கு கோவிலில் நைவேத்தியம் செய்யப்படுகிறது. எனவே அவனால் மறக்கப்பட்ட நைவேத்தியம், அவனுக்கென்று கோவிலில் செய்யப்படுகிறது. அரிசியின் மூலம் கிடைக்கும் பணம் பகவானுக்காக போய்ச் சேருகிறது. எனவே இந்தப் பிடி அரிசி திட்டத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை வளர வேண்டும். எந்தச் செயலுக்கும் தன்னம்பிக்கைதான் முக்கியம். கடவுளின் மீது நம்பிக்கை வைத்து பூஜை நைவேத்தியம் போன்றவற்றை தொடர்ந்து செய்து வந்தால் தான் அக் கடவுகளுக்கு சக்தி வரும்.

பிடி அரிசி திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்தினால் நாட்டில் பக்தி பெருகும். நமது பொருளாதார நிலையும் உயரும். வாங்கி உண்பதற்காகவாவது அன்றாடம் 100 பேர் கோவிலுக்கு வருவர். கோபுரத்தை பார்த்துக்கொண்டு கடவுள் நினைப்போடு உணவை உண்பர். பிடி அரிசி திட்டத்தின் மூலம் சமுதாய தொடர்பு வளர்ச்சியடைந்து ஒருவருக்கொருவர் நட்பு ஏற்படுகிறது. ஊரில் நல்லது பொல்லாதது ஏற்பட்டால் அனைவரும் பங்குகொள்ள ஏதுவாகிறது.

எனக்கு அன்றாடம் பொழுதே போதவில்லை. அநேகர் தங்களுக்கு பொழுதே போகவில்லை என்று கூறுகின்றனர். இது வேடிக்கையாகத்தான் உள்ளது. வசதியுள்ளவர்கள் பெரிய அளவில் தருமம் செய்யலாம். இதற்கு நாடெங்கும் சத் சங்கங்கள் தோன்ற வேண்டும். அங்கு வருபவர்கள் திருவிழாக் கூட்டங்கள் போல் கூடி கலைந்து விடக் கூடாது. நல்ல காரியங்களில் ஈடுபட வேண்டும். சத் சங்கம் ஒன்றுக்கு ஒரு சாது இருந்தால் கூட போதும். அவரே ஏனையோரை நிச்சயமாக நல்ல வழிப்படுத்தலாம். பிரதி பலனை எதிர்பாராமல் தன் கடமையைச் செய்வனே செய்ய முன் வர வேண்டும். விரோதிகளை கூடபொது ஜன சேவையின் மூலம் திருத்தலாம். இவ்வாறு செயல் பட்டால் நாட்டு மக்களிடையே புதிய சிந்தனை பிறக்கும். குறைந்தது வாரத்திற்கு ஒரு முறையாவது நல்ல காரியங்கள் செய்ய அனைவரும் முன் வரவேண்டும். துன்பத்தில் பங்கு கொள்ள வேண்டுமேயன்றி இன்பத்தில் பங்கு கேட்கக் கூடாது. இவ்வாறு செயல்பட எல்லோரும் துவங்கினால் உலகில் நிச்சயம் க்ஷேமமுண்டாகும்.


"ஸ்ம்ருதி முக்தாபலம்" என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.
1.வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2.ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3.ஆஹ்னிககாண்டம் உத்தரபாகம் ,
4.ஆசௌசகாண்டம், 5.ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6.ஸ்ராத்தகாண்டம் உத்தரபாகம்,
7.திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்தகாண்டமும் என்ற 7 பாகங்கள்சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப்பெறுகின்றது.ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500
கூரியர் தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்
தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்
9600543996,7904244054, 9003845456,9710765203

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும்**
**ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# பீஷ்மஸ்தவராஜம் - 3

*வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்*

प्राहुर् नारायणम् देवम् यम् विस्वस्य परायणम् ।
अणियसा अणीयामसम् स्तविष्ट्म् च स्थवीयसाम्
गरीयसाम् गरिष्टम् च स्रेष्टम् च स्रेयसामपि ।। ११

**ப்ராஹுர் நாராயணம் தேவம் யம் விஸ்வஸ்ய பராயணம்**
**அணீயஸாஅணீயாம்ஸம் ஸ்தவிஷ்டம் ஸ்தவீயாஸாம்**
**கரீயஸாம் கரிஷ்டம் ச ஸ்ரேஷ்டம் ச ஸ்ரேயஸாமபி**

*இவ்வுலகம் எவனை பாராயணம் செய்கிறதோ அந்த நாராயணனே இறைவன் என்று சொல்லப்படுகிறான்.அவன் ஸூக்ஷ்மங்களில் ஸூக்ஷ்மமாகவும் ஸ்தூலங்களில் ஸ்தூலமாகவும், வலிமை பொருந்தியவைகளில் வலிமையாகவும், புகழுடைய வர்களுள் புகழாகவும் விளங்குகிறான்.*

यम् वाकेष्वनुवागेषु निष्त्सु उपनिष्त्सु च ।
ग्रुणन्ति सत्यकर्माणम् सत्यम् सत्येषु सामसु ।। १२

**யம் வாகேஷ்வனுவாகேஷு நிஷத்ஸு உபனிஷத்ஸு ச**
**க்ருணந்தி ஸத்யகர்மாணம் ஸத்யம் ஸத்யேஷு ஸாமஸு || 12**

*வேதங்கள் வேத ஒலிகள் தேவதா மந்த்ரங்கள் சத்யமான கர்மாக்களில் உபனிஷத்களில் ஸாம வேதத்தில் அவனயே கைக்கொள்கின்றனர்*

चतुर्भिर्चतुरात्मानम् सत्वस्थम् सात्वताम् पतिम्
यम् दिव्यैर् देवमर्चन्ति गुह्यै; परमनामभि: ।। १३

**சதுர்பிர் சதுராத்மானம் ஸத்வஸ்தம் ஸாத்வதாம் பதிம்**
**யம் திவ்யைர் தேவமர்சந்தி குஹ்யை பரமனாமபி: || 13**

*வாசுதேவன் ஸங்கர்ஷ்ணன், ப்ரத்யும்னன், அனிருத்தன் என்று தன்னை நான்கு வ்யூஹங்களாய் தோற்றுவித்துகொண்டவனாய் ப்ரம்மம் மனம் ஜீவன் அஹங்காரம் என நான்காய் விரிபவனோ எவனை பகவானாய் திவ்யமான பெயர்களால் அர்ச்சிக்கின்றார்களோ அவர்கள் உள்ளத்தில் உறைபவன் இவன்.*

यस्मिन् नित्यम् तपस्तप्तम् यदगोष्वनुतिष्ट्ति ।
सर्वात्मा सर्ववित् सर्वम् सर्वग्य: सर्वभावन: ।। १४

**யஸ்மின் நித்யம் தபஸ்தப்தம் யத்ங்கேஷ்வனுதிஷ்டந்தி**
**ஸர்வாத்மா ஸர்வவித் ஸர்வம் ஸர்வஞ்ய: ஸர்வபாவன: || 14**

*தினமும் தபஸ்விகள் செய்யும் தவமாய் எல்லாவற்றிலும் உறைபவனாய் எல்லா ஆத்மாக்களாய் எல்லாமறிந்தவனாய் எல்லா நிலையாயிருப்பவன் வாஸுதேவனான கண்ணனே.*

यम् देवम् देवकी देवी वसुदेवागजीजनत् ।
भौमस्य ब्रह्मणो गुत्पयै दीप्ताग्निमिवारणि ।। १५

**யம் தைவம் தேவகீ தேவீ வஸுதெவாத் அஜீஜனத்**
**பொமஸ்ய ப்ரம்மணோ குப்தயை தீப்தக்னிமிவாரணி: || 15**

*அரணிக்கட்டையினுள் ரகஸ்யமாய் இருக்கும் அக்னியை அந்தணர்கள் கொண்டு வருவது போல் வஸுதேவர் மூலம் பகவானை தேவகி வெளிகொணர்ந்தாள்.*

यमनन्यो व्येदा शरीरात्मानम् वीतकल्मषम् ।
द्रुष्यानन्याय गोविन्दम् पश्यत् आत्मानम् आत्मनि ।। १६

**யமனன்யோ வ்யபேதா சரீராத்மானம் வீதகல்மஷம்**
**த்ருஷ்யானன்யாய கோவிந்தம் பஸ்யத் ஆத்மானம் ஆத்மனி || 16**

*சரீரத்தினின்று வேறுபட்டவன் ஆத்மா என்று உணர்ந்து தங்களை பந்தங்களிலிருந்து விடுவித்துக் கொண்டு வீத கலமஷர்களாய் கோவிந்தனை எல்லையற்றவன் என்று உணர்ந்து எல்லாத்மாக்களையும் தன்னாத்மாகவே பாவிக்கிறார்கள்.*

अतिवाय्विन्द्रककर्मणा अतिदुसूर्यादि तेजसम् ।
अतिबुद्दीन्द्रियमात्मानम् तम् प्रपद्ये प्रजापतिम् ।। १४

**அதிவாய்விந்த்ரகர்மணா அதிஸூர்யாதி தேஜஸம்**
**அதிபுத்தீந்த்ரியம் ஆத்மானம் தம் ப்ரபத்யே ப்ரஜாபதிம் || 17**

*காற்று இந்த்ரன் இவர்கள் செயலை விஞ்சிய, ஸூர்யனின் ஒளியை விஞ்சி அறிவு புலங்களை விஞ்சிய பரமாத்வான அந்த வாஸுதேவனை ப்ரஜாபதியை வணங்குகிறேன்.*

(தொடரும்)

# ஸ்ரீமடம் முகாம் நிகழ்ச்சிகள்

ஸ்ரீமடம் முகாம் ஸ்ரீ சந்த்ரமௌலீஸ்வரர் பூஜையுடன் யாத்திரையாக 13.02.21 சனிக்கிழமை காலை உஷத்வேளையில் காஞ்சீபுரத்திலிருந்து புறப்பட்டு சென்னை குரோம்பேட்டை சங்கர்லால் ஜெயின் தெருவில் உள்ள வேதபாடசாலையை வந்தடைந்தது. ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் 13.02.21 அன்று காலை காஞ்சீபுரத்திலிருந்து புறப்பட்டு திருமலா திருப்பதி தேவஸ்தானம் சார்பில் சென்னை தி.நகரில் நிர்மாணிக்கப்படவுள்ள ஸ்ரீ பத்மாவதி தாயார் திருக்கோயில் பூமி பூஜையில் கலந்து கொண்டு ஆசி வழங்கினார்கள். பின்னர் நேரடியாக குரோம்பேட்டை முகாமிற்கு திரும்பி இரண்டு கால பூஜைகளை நடத்தினார்கள்.



13.02.21 சனி மற்றும் 14.02.21 ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் பாடசாலையில் பூஜை. ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்து கொண்டார்கள். பூஜைக்கான ஏற்பாடுகளை பாடசாலை நிர்வாகிகள் திறம்பட செய்திருந்தார்கள்.

14.02.21 அன்று மாலை மூன்று கால பூஜைகளை முடித்துக் கொண்டு திண்டிவனம் அருகேயுள்ள ஓமந்தூர் என்னுமிடத்தில் உள்ள ஸ்ரீராம் பள்ளி வளாகத்திற்கு பூஜையுடன் எழுந்தருளினார்கள். 15.02.21 அன்று ஸ்ரீராம் பள்ளியில் பூஜை. முகாமிற்கான ஏற்பாடுகளை அப்பள்ளியின் தாளாளர் திரு. முரளி ரெட்டியார் சிறப்பாக செய்து கொடுத்தார்கள்.

15.02.21 அன்று மூன்று கால பூஜைகளை முடித்துக் கொண்டு புறப்பட்டு முகாம் திருவானைக்காவல் வந்தடைந்தது. 16.02.21 அன்று திருவானைக்காவல் ஸ்ரீமடத்தில் மூன்று கால பூஜை. அன்று இரவு ஸ்ரீமடம் முகாம் புதுக்கோட்டை அருகேயுள்ள இளையாத்தங்குடி என்ற இடத்திற்கு வந்தடைந்தது. 17.02.21 மற்றும் 18.02.21 இரண்டு தினங்களும் இளையாத்தங்குடி ஸ்ரீமடத்தில் (ஸ்ரீ மஹாதேவேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

அதிஷ்டானம்) பூஜை. 18.02.21 அன்று மூன்று கால பூஜையை முடித்துக் கொண்டு ஸ்ரீமடம் முகாம் ராமேஸ்வரம் புறப்பட்டது.

ராமேஸ்வரம் வரும் வழியில் ராமநாதபுரத்தில் ராஜா குமரன் சேதுபதி அவர்கள் அரண்மனைக்கு விஜயம் செய்து ராஜாவும் ராணியும் செய்த பாதுகா பூஜையை ஏற்றுக் கொண்டார்கள். இந்த நிகழ்ச்சியில் ராஜாவின் குடும்பத்தினர் பலரும் ராமநாதபுரம் பக்தர்களும் கலந்து கொண்டனர்.

ராமேஸ்வரம் காட்டுப்பிள்ளையார் கோவில் சமீபம் கோவில் நிர்வாகிகள் மிகப் பெரிய வரவேற்பு அளித்தார்கள். கோவில் தக்கார் சேதுபதி ஸ்ரீ குமரன் ராஜாவும் அவரது துணைவியாரும் கோவில் இணை ஆணையர் திருமதி கல்யாணியும் மற்றும் கோவில் சிப்பந்திகள் கலந்து கொண்டார்கள். அடுத்து லக்ஷ்மண தீர்த்தம் அருகே ராமேஸ்வரம் பொது ஜனங்கள் சார்பில் பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கு போடப்பட்டிருந்த மேடையில் நின்று வந்திருந்த பக்தர்களுக்கு தரிசனம் கொடுத்தார்கள். அங்கிருந்து அலங்கரிக்கப்பட்ட வண்டியில் ஏறி ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்கள். பிறகு சிறிது தூரம் நடந்தே வந்து ஸ்ரீ ராமேஸ்வரம் அக்னி தீர்த்தக் கரையில் உள்ள ஸ்ரீமடம் கிளையை வந்தடைந்தார்கள். 19.02.21 முதல் 25.02.21 வரை ராமேஸ்வரத்தில் ஸ்ரீ சந்த்ரமௌலீச்வர ஸ்வாமி பூஜையை நடத்தினார்கள்.

19.02.21 அன்று ரதஸப்தமி. தனுஷ்கோடியில் ஸ்நானம். பூஜை சங்கல்பம். காசி யாத்திரைக்காக தனுஷ்கோடியிலிருந்து மணல் எடுத்துக் கொண்டு அதற்குண்டான பூஜைகள் செய்யப்பட்டன. தசதானம், பஞ்சதானம் செய்யப்பட்டது. இரண்டு பசுக்கள் கோதானமாக வழங்கப்பட்டன. வந்திருந்த வைதீகர்கள், புரோகிதர்களுக்கு தானங்கள் கொடுக்கப்பட்டது.

19.02.2021 முதல் 22.02.2021 வரை தேனம்பாக்கம் வேதபாடசாலை முன்னாள், இந்நாள் வித்யார்த்திகள் ஒரு மஹாருத்ர யக்ஞம் செய்தார்கள். 21.02.21 அன்று பூர்ணாஹுதி.

22.02.2021 திங்கட்கிழமை அன்று ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ ராமநாத ஸ்வாமிக்கு கங்காபிஷேகம் செய்தார்கள். மஹாருத்ரத்தில் வைக்கப்பட்டிருந்த 11 கலச தீர்த்தங்களும் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் திருக்கரங்களால் அபிஷேகம் செய்யப்பட்டது.

முன்னதாக கோவில் கிழக்கு கோபுர வாசலில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளுக்கு கோவில் சார்பில் கோவில் தக்கார் ராமநாதபுரம் ராஜா ஸ்ரீ குமரன் சேதுபதி மற்றும் அவர் மனைவியார், இணை ஆணையர் ஸ்ரீமதி கல்யாணி அவர்கள் ஆகியோர் முன்னின்று பூர்ண கும்ப மரியாதையுடன் வரவேற்றார்கள். அங்கிருந்து ஊர்வலமாக அழைத்துச்

சென்று ஸ்ரீ விநாயகர் சந்நிதியில் வழிபாடு, பிரதக்ஷிணமாக ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி, காசி விசாலாக்ஷி மற்றும் காசி விஸ்வநாதர் சந்நிதிகளில் வழிபட்டார்கள். பிறகு ஸ்ரீ ராமநாதஸ்வாமி சந்நிதியை வந்தடைந்தார்கள். அர்த்தமண்டபத்தில் இருந்த சில பூஜகர்கள் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் கர்ப்பக்ருஹத்திற்கு போகக் கூடாது என்று சொல்லி வழியை மறித்துத் தடுத்தார்கள். ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அவர்களுக்கு எவரது மனதையும் புண்படுத்தி அபிஷேகம் செய்ய விரும்பவில்லை. லோக க்ஷேமார்த்தமாகவே அபிஷேகம் செய்ய வந்திருப்பதாக மிகவும் தெளிவாக எடுத்துரைத்தார்கள். சமாதானமாகி அவர்களே ஸ்ரீ பெரியவாளை கர்ப்பக்ருஹத்திற்கு அழைத்துச் சென்று கலசங்களை எடுத்துக் கொடுத்து அபிஷேகம் செய்வித்தார்கள். ஸ்ரீ பெரியவாள் அவர்கள் மூலமாகவே ஸ்ரீ ராமநாதஸ்வாமிக்கு ஸ்ரீமடத்திலிருந்து எடுத்து வந்திருந்த வெள்ளி, தங்க பூணல்கள், வெண்பட்டு வஸ்திரங்கள், 108 வில்வதளங்கள் அடங்கிய வில்வ மாலை ஆகியவைகளை அணிவித்தார்கள். பிறகு பூஜகர்கள் நாமாவளி சொல்ல ஸ்ரீ ராமநாத ஸ்வாமிக்கு அஷ்டோத்ர அர்ச்சனை செய்தார்கள். பின்னர் தீபாராதனை செய்து வழிபட்டார்கள்.

அங்கிருந்து நேராக அம்பாள் பர்வதவர்த்தினிக்கு குங்குமார்ச்சனை செய்து, பட்டுப்புடவை, வெள்ளி வாளி 2, கும்ப தீபாராதனை - 1, 7 கிளை தீபாராதனை ஆகியவைகளை சமர்ப்பித்து வழிபாட்டார்கள். அங்கிருந்து புறப்பட்டு அதிகாரிகள் வழியனுப்ப, ஸ்ரீமடம் முகாம் வந்தடைந்தார்கள்.

இந்த சமயத்தில் ராமேஸ்வரம் வாழ் அந்தணர்கள் அனைவருக்கும் வேஷ்டி புடவை தங்கக்காசுகள் தானமாக வழங்கப்பட்டன. 4 இடங்களில் அன்னதானம் மற்றும் ப்ராஹ்மண சந்தர்ப்பணையும் நடைபெற்று சுமார் 18000 பேருக்கும் மேல் பயனடைந்தார்கள். ஏராளமான தான தர்மங்கள் செய்யப்பட்டன. ஸ்ரீமடம் பக்தர்கள் திரளாக வந்திருந்தார்கள். எல்லோருக்கும் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

இந்த ஏற்பாடுகளை ஸ்ரீமடம் ராமேஸ்வரம் கிளை மேலாளர் ஸ்ரீ சுந்தர வாத்யாரும் ஸ்ரீ சாச்சா சாஸ்திரிகளும் வெகு திறமையாகவும் சிரத்தையுடனும் செய்து கொடுத்தார்கள்.

ராமேஸ்வரம் தீர்த்தம் ஸ்ரீமடம் கிளையில் குழுமியிருந்த பக்தர்களுக்கு தர்சனம் கொடுத்து விட்டு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ராமேஸ்வரம் யாத்ரையின் பூர்த்தியாக அக்னி தீர்த்தக்கரையில் தர்சனம் செய்து கொண்டு மதுரை நோக்கி யாத்திரையை தொடர்ந்தார்கள். இடையே ஸ்ரீ ராமநாத ஸ்வாமி தேவஸ்தான அதிகாரிகள் ராமநாத

ஸ்வாமிக்கு ஸ்ரீ ராமர் பூஜை செய்யும் படம் ஒன்றை ஸ்ரீ ஆசார்யாளுக்கு வழங்கினார்கள். விவேகானந்தா கேந்திரம், ராமகிருஷ்ண மடம், செம்பை ரோடில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வேத பாடசாலைக்கு விஜயம் செய்தார்கள்.

பிப்ரவரி 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் மதுரை ஸ்ரீமடத்தில் பூஜை. மதுரை வந்திரங்கிய ஸ்ரீ ஆசார்யாளுக்கு ஊர் எல்லையில் பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. திரளான பக்தர்கள் குழுமியிருந்து ஸ்ரீ ஆசார்யாளை வரவேற்றனர்.

27.02.21 அன்று மதுரையிலிருந்து புறப்பட்டு இரவு திருவானைக்காவல் வந்தடைந்தார்கள். 28.02.21 முதல் 03.03.21 வரை திருவானைக்காவல் ஸ்ரீமடம் கிளையில் பூஜை. திருவானைக்காவல் வரும் வழியில் மதுரை வைதீக சமாஜத்திற்கு விஜயம் செய்து அனுக்ரஹித்தார்கள்.

03.03.21 அன்று திருச்சி ஸ்ரீ ஏகவீராம்பாள் ஆலய கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டார்கள். அன்று மூன்று கால பூஜையை முடித்துக் கொண்டு முகாம் கும்பகோணம் நோக்கி புறப்பட்டது.

ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

## ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

- ♦ அனுஷம்
- ♦ மூலம்
- ♦ உத்ராடம்
- ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**

ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,<br>
ஸ்ரீமடம் நிர்வாகம்

# ஸ்ரீமத் தேவி பாகவதம் -11

*பி. ஆர். கண்ணன்*

***யத்ஸம்வாஹநலோபிந: ஶஶிகலாசூடஸ்ய ஹஸ்தாம்புஜ-
ஸ்பர்ஶேநாபி ச லோஹிதாயதி
முஹுஸ்-த்வத்பாதபங்கேருஹம் ।
தேநைவோத்தர- காஸராஸுரஶிரஶ -
ஶ்ருங்காக்ரஸஞ்சூர்ணந-
ப்ராசண்ட்யம் ததநுஷ்டிதம் கில கதம்
முக்திஸ்தலஸ்தே ஶிவே ।। 1।।***



'முக்திஸ்தலத்தில் ஒளிரும் ஈஸ்வரி! உன் ஸ்ரீ பாதமாகிற தாமரையை தன் தாமரைக்கையினால் சந்திரசூடனாகிய சிவபெருமான் தூக்க ஆசைப்பட்டு, ஸ்பரிசித்த மாத்திரத்திலேயே, அது சிவந்துவிடுகிறது. அவ்வளவு மென்மையாகவுள்ள ஸ்ரீபாதத்தினால் மலைபோலுள்ள மஹிஷாஸுரன் சிரஸ் தவிடு பொடியானது எவ்வாறு?' தேவியின் ஸ்ரீபாதத்தை ஸ்மரிக்குங்கால், ஆபத்திலிருந்து காக்கவேண்டும் என்ற பிரார்த்தனையை ஏற்று, தேவர்களுக்கு அபயப்பிரதானம் செய்தாள் தேவி. மஹிஷனின் மறைவிற்குப்பின் சூரியவம்சத்தைச் சார்ந்த சத்துருக்னன் என்பவரை ராஜாவாக்கினர். தர்மராஜ்யம் நடந்தது; எல்லாம் ஸம்ருத்தி; வியாதி, திருட்டு முதலானவை இல்லை; எல்லோரும் வர்ணாஸ்ரம தர்மத்தைக் கடைப்பிடித்தனர்.

வியாஸ பகவான் இக்கட்டத்தில், தேவி மனிதர்களின் ஹ்ருதயத்தில் ஸாக்ஷியாக, ஸம்ஸாரமாகிற மரத்தின் பழங்களை ருசிக்காத பக்ஷியாகவும், ஜீவன் மரத்தின் பழங்களை ருசித்து, இனிப்பாகவும், கசப்பாகவும் உள்ள அனுபவங்களை அடையும் பக்ஷியாக இருப்பதாகவும் உபநிஷத்தில் கூறப்பட்ட வேதாந்தக் கருத்தை சுட்டிக்காட்டுகிறார். ஜனங்கள் தங்கள் ஹ்ருதயத்தில் மரத்தின் இரு பக்ஷிகளைப்போல் ஜீவாத்மாவும், பரமாத்மாவும் இருப்பதை உணர்ந்து, வேறு ஒருவரும் தங்களைக்காக்க முடியாது என்று தெளிந்து, தேவியைச் சரண் புகவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார். ராஜ்யகாமம், ஸ்திரீகாமம் எல்லாம் சேர்ந்து வலுப்பெற்று தாக்கும்போது, பல நல்ல சக்திகளை ஒருங்கே சேர்த்துக்கொண்டு பலமாக

ஒடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அதுதான் தேவியின் ஆவிர்ப்பாவம். மஹிஷன் யுத்தத்தில் பலரூபங்கள் எடுத்துப்போரிட்டது காமமும், கோபமும் ரஜோ, தமோ குணங்களாக, ஸாதனைகளுக்கு அடங்காமல் பல வழிகளில் தாக்குவதைக் காட்டுகிறது. ஏற்கெனவே பார்த்ததுபோல் ரஜோ, தமோ குணங்களை ஆரம்பத்திலேயே வளரவிடாமல் ஒடுக்குதல் அத்தியாவசியம் என்பதை மறுபடியும் வலியுறுத்துகிறது இச்சரித்திரம்.

# ஸ்ரீமத் தேவி பாகவதம் -12

**சும்ப நிசும்ப வதம்**

சும்பனும் நிசும்பனும் அசுர சகோதரர்கள். புஷ்கர க்ஷேத்திரத்தில் 10000 வருடம் கடும் தபஸ் செய்து பிரம்மாவிடமிருந்து, ஸ்திரீயைத்தவிர யாராலும் மரணமில்லா வரம் பெற்றனர், மஹிஷனைப்போலவே. தேவர்களை முறியடித்து ஸ்வர்க்கலோகத்தைக் கைப்பற்றினர். தேவர்களும் முன்போலவே மேருமலைக்குகைகளில் சரண் புகுந்தனர். வெகுகாலம் கழித்து, குரு பிருஹஸ்பதியின் சொற்படி, அவர்கள் ஹிமாலயம் சென்று தேவியை 'ஹ்ரீம்' பீஜ தியானத்தினால் வழிபட்டனர். பார்வதி தேவி தரிசனம் தந்தாள். பார்வதியின் சரீர கோசத்திலிருந்து சிவந்த வர்ணம் கொண்ட கௌசிகீ தேவி வெளிப்படவே, பார்வதி கரிய நிறத்துடன் காளியாக ஆனாள்; இவள் தான் காலராத்திரியாகப் போற்றப்படுபவள். அம்பிகை தேவர்களுக்கு அபயமளித்தாள். சும்பனின் சேனாதிபதிகள் சண்டன், முண்டன் என்ற இருவரும் தேவியின் அதீத ஸௌந்தரியத்தையும், மதுரகானத்தையும் அனுபவித்து, சும்பனிடம் போய்த் தெரிவித்தனர். சும்பன் சுக்ரீவன் என்ற தூதனை அனுப்பினான். சுக்ரீவன் சமாதானமாக சும்ப நிசும்பர்களின் பராக்கிரமத்தை எடுத்துச் சொல்லி, தேவியை அழைத்தான். தேவி, சமத்காரமாக, 'சும்ப, நிசும்பர்களின் வீரம் நான் அறிவேன். ஆனால் சிறுவயதில், நான் என்னை யுத்தத்தில் வெல்பவரே என்னை மணக்கமுடியும் என்ற பிரதிக்ஞை செய்துள்ளேனே' என்று கூறி, சுக்ரீவனின் பரிகாச பதிலை இகழ்ந்து பேசவே, சுக்ரீவன் சும்பனிடம் விஷயத்தைத் தெரிவித்தான். மிக்க கோபத்துடன், சும்பன் தூம்ரலோசனனை அனுப்பவே, அவன் காமமான சொற்களை தேவியிடம் பேசினான். தேவி அவமானப்படுத்தவே, கடும் யுத்தம் நிகழ்ந்தது. இறுதியில், ஹுங்காரத்தினால் தூம்ரலோசனனை பஸ்மமாக்கினாள். தூம்ரலோசனன் பயங்கரமான வீரன். அவன் மரணத்தினால் அதிர்ச்சியுற்ற சேனைவீரர்கள், சும்பனிடம் சென்று, 'தேவி ஒருத்தியே ஜகத்தினை முழுவதுமாக அழிப்பாள். அதனால் நாம் எம்மாத்திரம்' என்றனர். சும்பன் அதை லக்ஷியம் செய்யாமல், சண்டமுண்டர்களை யுத்தம் செய்ய அனுப்பினான். தேவை ஏற்பட்டால், தேவியைக் கொல்லுமாறு முதன்முதலாக ஆக்ஞாபித்தான்.

சண்டமுண்டர்கள் தேவியிடம் ஸாமமாகவும், பயமுறுத்தியும் பேசினர். யுத்தம் நடந்தது. சண்டிகையின் நெற்றியிலிருந்து உண்டான காளிகை, இருவரையும் அம்பினால் கட்டி, தேவியிடம் கொண்டு சென்றாள். தேவியின் ஆக்ஞையால், காளிகை சண்டமுண்டர்களை சிரச்சேதம் செய்தாள். சண்டிகை, காளிகைக்கு இக்காரணத்தினால் சாமுண்டா என்ற நாமத்தை அளித்தாள். மறுபடியும் சேனைவீரர்கள் சும்பனை தேவியின் பரக்கிரமத்தைப்பற்றி எச்சரித்தும், சும்பன் 'நான் நாசமடைந்தாலும், ஸ்வதர்மத்தைக்காக்கப் போரிடுவேன்' என்றான்.

இப்போது சும்பன் ரக்தபீஜனை யுத்தபூமிக்கு அனுப்பினான். கடும் யுத்தத்தில் ரக்தபீஜன் மூர்ச்சையானான். பின்னர், தேவியின் ஸங்கல்பத்தினால் பிரம்மாணி. வைஷ்ணவி, மாஹேஸ்வரி, கௌமாரி, இந்திராணி, வாராஹி, நாரஸிம்ஹி, யாம்யா, வாருணி, கௌபேரி முதலிய சக்திகள் யுத்தத்தில் கலந்துகொண்டனர். தேவியின் கருணையினால், சண்டிகையின் சரீரத்திலிருந்து சிவதூதி என்ற சக்தியானவள் தோன்றி, சிவபெருமானை சும்ப நிசும்பர்களிடம் சமாதானம் பேச தூது போகச் சொன்னாள். தூது பலனளிக்கவில்லை. யுத்தம் தொடங்கி, மாத்ருகணங்களினால் அசுரசேனை தாக்கப்பட்டு ஓட்டமெடுக்கவே, ரக்தபீஜன் யுத்தத்திற்குத் திரும்பினான். மாத்ருகணங்களால் தாக்கப்பட்டு, ரக்தபீஜனின் ரத்தச்சொட்டு ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு ரக்தபீஜன், அவனைப்போன்ற உருவத்துடனும், பலத்துடனும் தோன்றினர். இது சிவபெருமானின் வரம். யுத்தபூமி முழுவதும் ஆயிரக்கணக்கான ரக்தபீஜர்கள் தோன்றவே, தேவர்கள் மிகவும் பயத்தையடைந்தனர். சண்டிகை காளியை வாயைப் பெரிதாகத்திறந்து, எல்லா ரக்தபீஜர்களின் ரத்தத்தையும் குடிக்கச் சொன்னாள். எல்லா ரக்தபீஜர்களும் மரித்தனர். ஆரம்பத்திலிருந்த ரக்தபீஜனும் மாண்டான். பாக்கியிருந்த சேனைவீரர்கள் சும்பனிடம் சென்று, தேவியிடம் சமாதானம் செய்துகொண்டு, பாதாளம் செல்வதே மேல் என்று அறிவுறுத்தினர். அறிவுரையைக் கேளாத சும்பன் தன் இளவலாகிய நிசும்பனை யுத்தத்திற்கு நியமித்து, தானும் அருகிலிருந்தான். கொடூரயுத்தத்திற்குப்பிறகு, நிசும்பனும் தேவியின் வாளால் மரித்தான். மறுபடியும் சேனாதிபதிகளின் யோசனையைப் புறக்கணித்த சும்பன் தன் புகழ், சரீரத்தைவிட முக்கியமானது என்று கூறி யுத்தம் செய்யக் கிளம்பினான். சண்டிகையைக் கண்டு மோகம் தலைக்கேறிய அவன், குரூபியாக இருந்தால்தான் தன்னால் யுத்தம் செய்யமுடியும் என்றான். சண்டிகை காளிகையை ஏவவே, காளிகை அசுரனின் கைகளையும், கால்களையும் வெட்டி, பின்னர் சிரச்சேதம் செய்தாள். வ்யாஸர் இந்த சரித்திரத்தின் பலஸ்ருதியைக்கூறி, இகபர சௌக்கியங்கள் பூர்ணமாக வந்துசேரும் என்றார்.

(வளரும்)

# பங்குனி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| *14/03/2021* | ஞாயிறு | காரடையான் நோன்பு, ஷடசீதி புண்யகாலம் |
| *25/03/2021* | வியாழன் | ஏகாதசி |
| *26/03/2021* | வெள்ளி | த்வாதசி, ப்ரதோஷ பூஜை |
| *26/03/2021* | வெள்ளி | **ஸ்ரீ காஞ்சி ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஆராதனை** |
| *28/03/2021* | ஞாயிறு | பௌர்ணமி பூஜை, பங்குனி உத்ரம் |
| *01/04/2021* | வியாழன் | அனுஷம் தேர் |
| *01/04/2021* | வியாழன் | அனுஷம் பாராயணம் |
| *03/04/2021* | சனி | மூலம் தேர் |
| *05/04/2021* | திங்கள் | உத்ராடம் தேர் |
| *05/04/2021* | திங்கள் | உத்ராடம் பாராயணம் |
| *07/04/2021* | புதன் | ஏகாதசி |
| *08/04/2021* | வியாழன் | த்வாதசி |
| *09/04/2021* | வெள்ளி | ப்ரதோஷ பூஜை |
| *07/04/2021* | புதன் | அவிட்டம் தேர் |
| *07/04/2021* | புதன் | அவிட்டம் பாராயணம் |
| *13/04/2021* | செவ்வாய் | உகாதி |
| *19/03/2021, 26/03/2021, 02/04/2021 - 09/04/2021* வெள்ளிக்கிழமை பூஜை | | |

# ஆசாரக் கோவை

ப்ரதீபப் பேழை

ந.ரா. முருகவேள்

**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் அருளாதரவில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்காகக் காஞ்சீபுரத்தில் நடந்த நீதிபோதனை வகுப்புக் கோடைக்காலப் பயிற்சியின்போது ஆற்றிய சொற்பொழிவைத் தழுவிய கட்டுரை**

## முன்னுரை

*ஆசாரக் கோவை என்பது, சங்கம் மருவிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். சங்க காலத்திலும், அதற்கு அடுத்துச் சிறிது காலத்திலும் தோன்றிய நூல்களுள் ஒன்றாதலின், இது இன்றைக்குச் சற்றேறக்குறைய 1,800 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனலாம். இதன் ஆசிரியர் பெருவாயில் முள்ளியார் என்னும் சங்க காலப் புலவர் ஆவார்.*

*ஆசாரம் என்னும் சொல் நல்லொழுக்கம் எனப் பொருள்படும். ஆசிரியர் திருவள்ளுவர், அச்சமே கீழ்களது ஆசாரம்''. என்னும் திருக்குறளில் ஆசாரம் என்னும் சொல்லை, இன்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கையாண்டிருத்தல் காணலாம். நல்லொழுக்கமாகிய ஆசாரங்களைத் தொகுத்து, ஒழுங்குபடுத்திக் கோவையாக்கிச் செய்யப்பெற்றதனால், இந்த நூலுக்கு ஆசாரக் கோவை என்னும் பெயர் அமைந்தது.*

*மக்கள் வாழ்க்கைக்கு நன்மை பயக்கக்கூடிய பலவகை நல்லொழுக்கங்களைப் பற்றி எடுத்துக்கூறி அறிவுறுத்தும் முறையில் இந்த நூல் அமைந்திருத்தலின், உபதேசம் புரிந்து அறிவுறுத்துகின்ற செப்பல் ஓசையில் அமைந்த இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பா, குறள் வெண்பா, பட்றொடை வெண்பா முதலிய வெண்பா வகைகளால் இந்த நூல் அமைந்திருக்கிறது. இந்த நூலாசிரியர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதும், இவர்தம் ஊரின் பெயர் வண்கயத்தூர் என்பதும் தற்சிறப்புப் பாயிரச் செய்யுளால் விளங்குகின்றன. .*

## நூற்பெருமை

*ஆசாரக் கோவை என்னும் இந் நூலில் செய்யுட்களை உரையாசிரியர்கள் ஆங்காங்கே தத்தம் நூல்களில் மேற்கோளாக எடுத்துக் காட்டுகின்றனர். உச்சிமேற் புலவர் கொள்.*

நச்சினார்க்கினியர் தாம் இயற்றிய பத்துப்பாட்டு, உரையிலும், சீவக சிந்தாமணி உரையிலும் ஆசாரக்கோவையின் செய்யுட்கள் பலவற்றை மேற்கோள்களாக எடுத்துக் காட்டுவதனால், இன்றைக்கு ஏறத்தாழ அறநூறு ஆண்டுகளுக்கு முன்னரே இந் நூல் மிகப் பெரிதும் போற்றிப் பாராட்டப்பட்டு வந்தது என்னும் உண்மை புலனாகிறது. இவ்வாறே நன்னூல், இலக்கண விளக்கம் முதலிய நூல்களில் உரையாசிரியர்கள் இதன் செய்யுட்களை எடுத்துக் கையாண்டு போற்றியிருக்கின்றனர். பிற்காலப் பாண்டிய அரசர்களுள் மிகவும் சிறந்தவரும், பெரும்புலமை வாய்ந்தவரும், சிறந்த பல நூல்களை இயற்றி உதவியவரும் ஆகிய அதிவீரராம பாண்டியர் (கி. பி. 1564-1604) தாம் இயற்றிய காசிகாண்டம் என்னும் நூலில், பல இடங்களில் ஆசாரக் கோவைச் செய்யுட்களின் கருத்துக்களை, ஆங்காங்கே எடுத்துப் போற்றி விளக்குகிறார்... இதனாலும் இந்த நூலின் அருமை பெருமைகள் செவ்விதிற் புலனாகின்றன.

## நூற்பெயர்

ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் உண்ணல் உடுத்தல், உறங்குதல், நீராடுதல் முதலிய நாட்கடமைகளை எல்லாம் எவ்வாறு செய்தல் -வேண்டும் என்பது பற்றிய செய்திகளை இந்நூல் சுருக்கமாகவும் தெளிவாகவும் தொகுத்துக் கூறுகிறது. செய்யத்தக்கன இவை, செய்யத் தகாதன இவை, இன்ன செயலைச் செய்தால் (இன்ன நலத்தைப் பெறலாம், இன்னதைச் செய்தால் இத்தகைய கேடு வரும் என்னும் முறையில், இந்த நூல் அழகுற விளக்கிக் கூறுகிறது. ஆங்காங்கே முந்தையோர் கண்ட முறை பேரறிவாளர் . துணிவு; நல்லறிவாளர் செயல்: என்று இந் நூல் குறிப்பிடுவதனால், இந்த நூல் கூறும் ஆசாரமாகிய நல்லொழுக்கங்கள் பலவும் பண்டைப் பேரறிஞர்கள் பலரும் தத்தம் அநுபவத்தில் ஆராய்ந்து கண்டுணர்ந்த அரிய முடிவுகளேயாம் என்பது பெறப்படும், எனவே இந் நூலின் பொருளை ஈண்டு இயன்றவரை சுருக்கமாகத் தொகுத்துக் காண்போம்.

## ஆசார வித்து

பிறர் செய்த உதவியை என்றும் மறவாது போற்றுதல், பிறர் செய்யும் ‘‘.. குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளும் தன்மை, எவரிடத்திலும் இனிமையாகவே பேசுதல், எந்த உயிருக்கும் துன்பம் செய்யாதிருத்தல், நல்ல நூல்களைக் கற்றுணர்தல், உலக நடை அறிந்து ஒழுகுதல், இது நற்செயல் இது தீச்செயல் என்று பகுத்து உணரும் அறிவினை உடையராதல், நல்ல இயல்பு’ உடையவர்களுடன் நட்புச் செய்துகொள்ளுதல் ஆகிய இந்த எட்டும் நல்லொழுக்கத்தின் வளர்ச்சிக்கு விதை போன்றனவாகும்.

நல்லொழுக்கத்திலிருந்து சிறிதும் பிறழாது நடப்பவர்கள், நற்குடிப் பிறப்பு, நீண்ட வாழ்க்கை, செல்வம், கல்வியறிவு, வனப்பு, நிலக்கிழமை, மிகுந்த புகழ், நோயின்மை முதலிய நலங்களைப் பெறுவார்கள்.

ஆசிரியர்களுக்குக் காணிக்கை கொடுத்தல், பிறர்க்கு இயன்ற உதவி புரிதல் பொறிபுலங்களை நல்வழியில் செலுத்துதல், கற்க வேண்டுவனவற்றைக் கற்றல் என்னும் நான்கையும், அறம் பொருள் இன்ப நெறிகளுக்கு ஏற்றபடி பாதுகாத்துக் கொண்டு நடத்தல் வேண்டும். இல்லையேல் பயன் தராமல் கெட்டொழியும்.

## நாட் கடமைகள்


ஒவ்வொருவரும் வைகறை யாமமாகிய விடியற்காலையிலேயே துயிலுதலை விட்டு எழுந்துகொள்ளுதல் வேண்டும். எழுந்து அன்று நாம் செய்வதற்கு உரிய நல்லறங்களையும், சிறந்த பொருள் தேடும் முயற்சிகளையும் பற்றிச் செவ்வனே சிந்தித்தல் வேண்டும். தாயையும் தந்தையையும் தொழுது வணங்கிக் கொண்டு எழுந்து, நம் நாட்கடமைகளச் செய்வதற்குத் தொடங்க வேண்டும். இதுவேநம் முன்னோர்கள் ஆராய்ந்து கண்டு அமைத்துச் சென்ற நல்லொழுக்க முறைகளாகும்.

எச்சில் என்றால், நாம் பொதுவாக வாய் எச்சிலை மட்டுமே நினைவுகூறுகிறோம். வேறு பல எச்சில்களும் உண்டு, மலம் கழித்தல், சலம் கழித்தல், இணைவிழைச்சுச் செய்தல், இதழ் பருகல் என்னும் நான்கு எச்சில்களையும் நாம் தக்கவாறு பாதுகாத்துக்கொள்ளுதல் வேண்டும். இந்த நான்கு எச்சில்களுக்குள் ஏதேனும் ஒன்றை உடையவர், ‘பசுக்கள், அந்தணர்கள், தெய்வத் திருவுளங்கள், உச்சந்தலை ஆகியவற்றைத் தீண்டுதல் கூடாது. அவ்வாறே புலையன், சந்திரன், சூரியன் விழுகிற விண்மீன் நாள் முதலியவற்றை. உற்றுநோக்குதல் கூடாது. இந்த எச்சில்கள் நேர்ந்தால் அவற்றைப் போக்கித் தூய்மை செய்து கொள்ளாமல் அறிவு உடையவர்கள் எதனையும் ஓத மாட்டார்கள்; யாரோடும் பேச மாட்டார்கள் கண்துயில மாட்டார்கள்.’’

விடியற்காலையில் ஆல், வேல் முதலிய குச்சிகளால் பல்லைத் துலக்கி, முகம் கழுவிக்கொண்டு, நம் வழிபடு கடவுளரை நாம் அறிந்த முறைப்படி வணங்கித் துதித்து, அதன் பின்னர் நமக்கு உரிய நாட்கடமைகளைச் செய்யத் தொடங்குதல் வேண்டும். மாலை வேளைகளில், நாம் வணங்கும் தெய்வத்தை நின்றுகொண்டு தொழாமல், ஆர அமர்ந்திருந்து தியானித்துத் தொழுதலே முறையாகும்.

(தொடரும்)

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி



டாக்டர். **எஸ். பத்மநாபன்**, நாகர்கோயில்

ரிஷிகள் வாழ்ந்த நாடு. ஆழ்வார்களும் நாயன்மார்களும் அனுக்ரகம் செய்த நாடு. பாருகுள்ளே நல்ல நாடு நமது நாடு. இந்த நன்னாட்டினிலே இன்றும் நமக்கு அருள் பாலிப்பவர் ஸ்ரீ மகா பெரியவா. அவரிடம் ஆசி பெற எனக்கு மூன்று முறை வாய்ப்பு கிடைத்தது.

என் ''குமரி மாவட்டக் கோயில்கள்'' என்னும் நூலுக்கு ஸ்ரீமுகம் கிடைத்த நாள் முதல் அம்மகானின் ஆசி பெற துடித்தேன். ஆனால் அதற்கு வாய்ப்பு கிடைக்காமலே இருந்தது.

1986 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 அன்று நான் பெரியவாளை முதன் முதலாக தர்சனம் செய்ய வாய்ப்பு கிடைத்தது. அன்னாள் பொன்னாள். அன்று அதிகாலையில் ஸ்ரீ மடத்துக்குச் சென்றேன். 1982 இலங்கையில் நடந்த உலக இந்து மகா நாட்டில் நான் பேசிய ஆய்வுரையான ''இந்து சமயம் ஓர் உலக சமயம்''என்னும் நூலை அவரிடம் சமர்ப்பித்தேன். நூலைப் பெற்றுக் கொண்டு அதை டார்ச் விளக்கினை வாங்கிகொண்டு பல்லக்கின் கதவை அடைத்து விட்டார். கால் மணி நேரம் கழித்து ஸ்வாமிகள் ஸ்னானத்துக்காக சென்று விட்டார்கள். திரும்பி வந்த ஸ்வாமிகள் ''புத்தகத்தை கீழே வைக்க மனமில்லை'' என்று கூறி புத்தகத்தின் அட்டையை அலங்கரித்த ரோம் நாட்டு சிவலிங்கத்தைப் பற்றித் துருவித் துருவி பல கேள்விகளைக் கேட்டார்கள்.

நான் ரோம் நாட்டிலுள்ள வாடிகன் அருங்காட்சியகம் சென்று அங்கு கிடைத்த சிவலிங்கத்தையும் அதன் வரலாற்றையும் படமெடுத்த நிகழ்ச்சிகளையும் ஸ்வாமிகளிடம் கூற ஆர்வத்தோட கேட்டறிந்தார். என்னுடைய குமரிமாவட்டக் கோயில்கள்'' ''தென்னகத் திருக்கோயில்கள் என்னும் இரண்டு நூல்களையும் பற்றி விசாரித்தார். அவருடைய நினைவு ஆற்றல் அதிசயிக்க வைத்தது.

1987ஆம் ஆண்டுஎன் மகள் திருமணம் தொடர்பாக மீண்டும் அவரைப் பார்க்க நேர்ந்தது. அவளுக்குப் பார்த்த வரன் ராணுவத்தில் மேஜர் ஜென்ரலாக ப் பணிபுரிபவர். நிறைய பேர் வேண்டாமென்றார்கள். எனக்கும் இருமனமாகவே இருந்தது. ஸ்வாமிகளிடம் இதைக்கூறினேன். அவரும் ஆசீர்வாதம் செய்தார்.

என் மகள் திருமணம் முடிந்த மூன்று மாதங்களுக்குள் இந்திய அமைதிப்படை மூலம் மாப்பிள்ளை இலங்கைக்கு அனுப்பப்பட்டார். எங்கள் எல்லாருக்கும் பயம். ஆனால் எதிர்பாராமல் சில தினங்களுக்குள் சென்னைக்கே மாற்றல் கிடைத்துவிட்டது. அந்த நடமாடும் தெய்வத்தின் கருணையாலேயே இது நடந்தது என்றால் மிகையில்லை. அம்மகானால் என் வாழ்வில் எத்தனையோ திருப்பங்கள் ஏற்பட்டன. அத்தனையும் அவரது ஆசிகளாலேயே நடந்தன. இப்படி பல பேர் வாழ்வில் வசந்தமாக, ஆசிவழங்கும் ஊற்றாக விளங்கி வருகிறார். அவரது பொன்னடி பணிவோம்.



தர்மம்ங்கறதுதான், லோகத்துல, ஒரு ஸ்திரத்தன்மைக்கி காரணம். ப்ரதிஷ்டா - Safety, Stability, Strength-த்து, அப்டில்லாம் இன்னிக்கி என்ன சொல்றொமோ - அதுக்கு எல்லாத்துக்கும் காரணம், இந்த தர்மம்.

தர்மத்த காப்பாத்தினா - படிப்பும் வளரணும், வியாபாரமும் வளரணும், நிர்வாகமும் வளரணும். சேவையும் வளரணும், எல்லாரும் வளரணும், எல்லாருக்கும் வளர்ச்சி வரும் - இன்னிக்கி சொல்ற Inclusive Growth ங்கறது அந்த காலத்துல, தர்மம்-ங்கற பேர்ல சொல்லியிருக்காங்க.

எல்லாரும் சேந்து தர்மத்துக்கு சேவை பண்ணணும். புருஷாளோ, ஸ்த்ரீகளோ, படிச்சவாளோ, படிக்காதவாளோ, யாரா இருந்தாலும், இந்த தர்மந்தான் எல்லாரையும் ஒண்ணு சேக்கறது. தர்மந்தான் எல்லாரையும் வாழ வெக்கறது. தர்மந்தான் எல்லாரையும், அபிவிருத்திக்கி கொண்டு போறது.

# புராணக் கதை

## காஞ்சி வாதூலன்

துன்பம் எப்படி வேண்டுமானாலும் வரும். ஒருத்தனுக்கு அரசாக்ஷி இருந்தும் பயனில்லாமல் போயிற்று என்று பௌராணிகர் கூற சிஷ்யன் எப்படி நேர்ந்தது என்று வினவ அவர் கூறலானார். மத்ய தேசம் செழிப்பான தேசம். எல்லா வளங்களையும் பெற்ற தேசமாக இருந்தது. அதன் இளவரசன் நாபாகன் இளமை வேகத்தில் சுப்ரபா என்பவளைக் கடத்திக் கொண்டு மணம் புரிந்தான்.

அவள் வைஸ்ய வர்ணத்தினள் என்னும் காரணத்தைக் கொண்டு இளவரசனை நாடு கடத்தினர் பெற்றோர். அவர்களும் கானகம் வந்து மிகக் கஷ்டமான வாழ்க்கையை நடத்தி வந்தனர். அவர்களுக்கு பாலனந்தனன் என்னும் புதல்வன் இருந்தான். அவனிடம் ஸுப்ரபா நீ கோபாலனாக இருந்து எங்களைக் காப்பாற்று என்று கூறி வந்தாள்.

அவனோ அதற்கு இடையன் என்னும் பொருள் கொள்ளாமல் அரசன் (கோ என்றால் பூமி) என்று பொருள் கொண்டு அதற்கு ஆசைப்பட்டான். ஆசைப்படலாம். ராஜ்யமெங்கே? தனக்கு யார் நாடு தருவார் என்று சிந்தித்துக் கொண்டு அவன் தேசாந்திரியாக இமயமலை அடிவாரத்திற்கு வந்தான். அங்கு நீபன் என்னும் அரசன் தன் ராஜ்யத்தை விட்டு தவமியற்றிக் கொண்டிருந்தான்.

அவனிடம் பால நந்தன் தன் குறையைக் கூற அவன் அஸ்த்ர வித்தைகளை அவனுக்குக் கற்பித்தான். அவனிடம் முறையான கல்வி கற்றபின் தன் சொந்த ராஜ்யத்திற்குப் போய் தன் பின்ன சகோதரர்களிடம் தன் உரிமையைக் கேட்டான். அவர்கள் வைஸ்யனான உனக்கு அரசாள உரிமை இல்லை என்று அவனை விரட்ட கோபத்துடன் அவர்களுடன் போரிட்டு வென்றான். ராஜ்யத்தைக் கைக்கொண்டு தன் தந்தை நாபாகனிடம் ஸமர்பித்தான். புதல்வனின் பராக்ரமத்தை மெச்சிய அவன் நாடு கடத்தப்பட்ட நான் எப்படி அரசாள்வது என்று ராஜ்ய பரிபாலனத்தை ஏற்கவில்லை. அவன் தயக்கத்தை உணா்ந்த ஸுப்ரபா ''அன்பரே நான் பிறப்பினால் வைஸ்ய வரணத்தவள் அல்ல. நானும் க்ஷத்ரியப் பெண்தான் . என் கதையைக் கேளும்.

ஸுரதன் என்னும் க்ஷத்ரிய ராஜா தன் பரிபாலனத்தைத் துறந்து ஏகாந்தமாக காட்டில் த்யானம் செய்துவந்தார். ஒரு நாள் ஒரு பறவை தன் குஞ்சோடு பறந்து வந்தபோது குஞ்சு திடீரென்று கீழே விழ அரசர் மிகவும் மனம் நொந்தார். அவருடைய காருண்யத்தில்

பிறந்தவள் நான். என் பெயர் க்ருபாவதி. அவருடைய தயவில் அந்த ஆஸ்ரமத்தில் வளர்ந்து வந்தேன்.

ஒரு நாள் தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருக்கும்போது எங்களில் ஒருவர் அங்கு வந்த அக்ஸ்த்ய ரிஷியின் தம்பியை வைஸ்யன் என்று ஏளனம் செய்தனர். அப்படிச் செய்தது நான் என்று தவறாகப் புரிந்து கொண்ட ரிஷி என்னை வைஸ்யப் பெண்ணாகப் போ என்று சபித்தார். கவலையுடன் கேலி செய்தவள் நானில்லை என்று எடுத்துக்கூற தன் தவறை உணர்ந்து எப்போது என்னுடைய புதல்வன் ராஜ்யம் அடைவானோ அப்போது இந்த சாபம் நீங்கும் என்றார்.

எனவே நான் பிறப்பால் க்ஷத்ரியப் பெண்ணே. என்னை மணந்ததால் நீங்களும் வைஸ்யனாகவில்லை. ராஜ்ய பரிபாலனம் செய்யும்'' என்றாள். இவ்வளவு சொல்லியும் நாபாகன் என் பெற்றோர் தடுத்ததை நான் செய்ய விரும்பவில்லை. இந்த ராஜ்யத்தை என் மகன் பால நந்தனே ஆளட்டும் ''என்று கூறி அவனுக்கு பட்டாபிஷேகம் செய்து முடித்தான். ராஜ்யம் கிடைத்தும் அதை ஆள்வதற்கு முடியாமல் போனது அவனுக்கு. அதனால்தான் சொன்னேன் கஷ்டம் எந்த உருவத்திலும் வரும்'' என்று கூறி ஓய்ந்தார் பௌராணிகர்.

## ஸனாதன தர்மப் புதிர்கள் பிப்ரவரி விடைகள்

1. *நீலகண்ட விஜய சம்பூ*
2. *எதை ஓயாமல் நினைத்துக் கொண்டு இருக்க அதுவாகவே ஆதல்*
3. *புரந்தர தாஸர்*
4. *நின்றசீர் நெடுமாறன்.*
5. *நாட்ய சாஸ்த்ரம்*
6. *திரு வீழி மிழலை*
7. *பித்ரு ப்ரீதிக்காக கங்கையை ஸ்ரீதர அய்யாவாள் கிணற்றில் வரவழைத்த நாள்*
8. *அப்பாலும் அடிசார்ந்தார்.*
9. *திருவெங்காடர்*
10. *ஜாம்பவான்.*

# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த யோகிந்த்ரர்

வேங்கடகணபதி சர்மா

### அஹம் ப்ரம்மாஸ்மி என்பதன் பொருள்

**அத அதுனாஹம் ப்ரம்மாஸ்மி இத்யனுபவ வாக்யார்தோ வர்ண்யதே 170**

*அனுபவ உண்மையான அஹம் ப்ரம்மாஸ்மி என்பது விளக்கப்படும்.*

**ஏவமாசார்யேண அத்யாரோப அபவாத புரஸரம் தத் த்வம் பதார்தௌ சோதயித்வா வாக்யேன அகண்டார்தே அவபோதிதே அதிகாரிணோ அஹம் நித்ய சுத்த புத்த முக்த ஸத்யஸ்வபாவ பரமானந்தனந்தாத்வ்யம் ப்ர்ஹ்மாஸ்மீத்யகண்டாகாரகாரிதா சித்தவ்ருத்தி உதேதி ॥ 171**

*பின்பு ஆசார்யன் தத் த்வம் பதத்வயத்தின் அரத்தத்தை அரோபணமான மாயையை விலக்கி உண்மையான பொருளை விளக்கியபின் சிஷ்யன் உண்மையான பொருளை அறிகிறான். தத் த்வமஸி என்னும் வாக்யம் அவனுடைய மனதில் தான் நித்ய சுத்த புத்த முக்த ஸத்ய ஸ்வரூபன் ஆனந்தமயமானவன் என்பதை அவன் உணர்கிறான்.*

**ஸா து சித்ப்ரதிபிம்பஸஹிதா ஸதீ ப்ரத்யக் அபின்னம் அக்யாதம் பரம்பஹ்ம விஷயீக்ருத்ய தத்கத அஞ்யான்மேவ பாததே ததா படகாரனதந்து தாஹே படதாஹவத் அகிலகாரண அஞ்யானே பாதிதே ஸதி தத கார்யஸ்ய அகிலஸ்ய பாதிதத்வாத் ததந்தர்பூத அகண்டாகார அகாரிதா சித்தவ்ருத்திரபி பாதிதா பவதி ॥ 172**

*ப்ரம்ம சைதன்யத்தால் ஒளிரும் இந்த சித்தவ்ருத்தி ப்ரம்மனை விஷயமாகக் கொண்டு அஞ்யாத்மாக இருந்துகொண்டு தானும் ப்ரம்மனும் ஒன்று என்று உணர்ந்து ப்ரம்மனைச் சார்ந்த அவித்யயை நாசமாக்கும்.உதாரணம் துணிக்கு ஆதாரமான நூல்கள் அழிய துணியும் அழிவதுபோல்.அவித்யை அழிய அதனுடைய பலன்களும் அழியும்.இந்த சித்தவ்ருத்தியும் உண்மையை உணரும் போது மறையும்*

*(தொடரும்)*

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம்.
மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா



வ்யாஸர் கர்ணனைப் பார்த்து அச்சப்படும் தர்மனே அச்சம் வேண்டாம்.

**இதற்கு ஓர் உபாயம் சொல்கிறேன்.**

ப்ரதிஸ்ம்ருதி என்னும் ஒரு வித்யயை அர்ஜுனன் தெரிந்து கொள்ள வேண்டும். சிவபெருமானிடமிருந்தும், இந்த்ரனிடமிருந்தும் அஸ்த்ரங்களை அவன் பெற வேண்டும். கொந்தேய நீங்களும் இவ்வானத்திலிருந்து வேறு ஒரு வனத்திற்குப் போங்கள். இப்படி சொல்லி விட்டு வ்யாஸரும் அந்த வித்யையை அர்ஜுனனுக்குத் தந்து மறைந்தார். தர்மரும் அந்த த்வைத வனத்திலிருந்து காம்யகம் என்னும் வனம் ஏகினார்.

வ்யாஸரின் ஆணைக்கு இணங்க தர்மர் அர்ஜுனனை சிவபெருமானையும் இந்த்ரனையும் வழிபட அனுப்பினார். வீரம் மிக்க அர்ஜுனனும் இமயமலையை நோக்கிச் சென்றான். அங்கே உக்ரமான தவம் செய்து சிவபெருமானையும் இந்த்ரனையும் மகிழ்வித்தான்.

ஒரு நாள் தவத்தில் அடிபட்ட பன்றியின் மூலம் அவனுக்கும் சிவபெருமானுக்கும் யுத்தம் மூள வந்திருப்பது சிவன் என்று தெரியாமல் அவன் அடிக்க அவரும் மகிழ்ச்சியுடன் பாசுபதாஸ்த்ரத்தை அவனுக்கு அருளினார். அவரிடம் அஸ்த்ரம் பெற்றபின் அர்ஜுனன் யதாவிதி லோகபாலகர்களை பூஜித்தான். பின்பு அமராவதியை அடைந்து இந்த்ரனை நேருக்கு நேர் சந்தித்தான்.அவனிடம் அஸ்த்ரங்களை பெற்றபின் தன் தம்பிகளை நினைத்தான்.

அர்ஜுனன் இமயமலைக்குப் போனபின் அவர்களிடம் மகிழ்ச்சியில்லை. ஓரிடம் விட்டு ஓரிடம் போய் இமயமலைச் சாரலுக்கு வந்தனர். அங்கு நர நாராயணரின் ஆஸ்ரமத்தைக் கண்டனர். அவர்கள் கந்தமாதனம் என்னும் மலையின் அடிவாரத்தில் அர்ஜுனன் வரவுக்காகக் காத்திருந்தனர்.

அர்ஜுனனுன் அங்கு வர த்ரௌபதியும் பாண்டவர்களும் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். அர்ஜுனனோடு அவர்கள் அங்கு நாங்கு வருடங்கள் வசித்தனர். அது ஓரிரவு போல கழிந்தது.ஏற்கனவே ஆறு வருடங்கள் கழிய இந்த நாலு வருடங்களும் சேர்த்து பத்து வருடங்கள் கழிந்தன. அவர்கள் அனைவரும் வந்தவழியே வந்து யமுனை உத்பத்தி ஆகும் இமயமலையின் ஒரு பக்கத்தில் தங்க அங்கு ஒரு வருடம் போயிற்று.

தங்களது வன வாஸத்தின் பனிரெண்டாவது வருஷத்தை ஸரஸ்வதி நதியின் கரையில் கழித்தபின் மீண்டும் த்வைத வனத்திற்கு வந்தனர். கோடைகள், போய் மழைக்கா லம் போய்,சரத்தும் போய் வேனில் பருவம் வரை அங்கிருந்துவிட்டு மீண்டும் காம்யக வனம் போயினர்.

ஒரு நாள் அவர்களிடமிருக்கும் இடத்திற்கு ஸத்யபாமாவுடன் க்ருஷ்ணர் அவர்களைப் பாக்க வந்தார். அவர் கூறினார்.

க்ருஷ்ணர் தர்மனே ராஜ்யலாபத்தைவிட தர்மம் பெரியது.தவமே அதற்கு ஆதாரம். நீ உனது நேர்மையினாலும் சத்யத்தாலும் இவ்வுல்கையே வென்றுள்ளாய். ஆயிரத்திற்கும் அதிகமான ரத கஜ துரக பதாதிகள் உன் நிமித்தம் சித்தமாயுள்ளன. ஹஸ்தினாபுரம் அழிவதை நீ காண்பாய்.''

தர்மர் ''அன்பனே பாண்டவர்களின் புகலிடம் நீயே. உன்னைச் சரணடைந்தோம். சமயம் வரும்போது நீயே இதைச்செய்வாய். ஐயமில்லை. இந்த பனிரண்டு வருடங்கள் சரியான முறையில் கழிந்தன.நாங்கள் உன்னை மீண்டும் வந்தடைவோம்.''

அவர்களிடம் பேசியபின் த்ரௌபதியைத் தேற்றியபின் க்ருஷ்ணர் விடை பெற்றுக் கொண்டபின் த்வாரகைக்கு ஏகினார்.

(தொடரும்)

# அத்வைத ஸித்தாந்த வினா விடை

***வினா :- கிரமமுத்தி என்பது என்ன?***

***விடை :-*** *யாகஞ் செய்தல், தெய்வவழிபாடு, யோகப் பயிற்சி முதலியவற்றிலே சித்தி பெற்றவனுக்கும், துறவறத்தை முறைப்படி அனுஷ்டிப்பவனுக்கும், கைலாசம் வைகுண்டம் முதலிய சகுணப்பிரும்ம உலகம் கிடைக்கும். இதைப் படிப்படியாய் அடையும் முத்தி' என்று கூறலாம். இதைத்தான் வேகம் முதலியன கிரமமுத்தி' என்று கூறுகின்றன.*

***வினா :- சகுணப்பிரும்ம உலகத்தில் இருப்பவர்கள், நிர்க்குணப் பிரும்மத்தில் அடங்குவதெவ்வாறு?***

***விடை :-*** *மஹா பிரளயம்' என்னும் ஊழிக்காலத்தில் இறைவனுடைய திரிமூர்த்தியுருவங்களும் மறைந்துவிடும். அந்தக் காலத்தில் மேற்கூறிய முத்தர்களுக்கு நிர்குணப் பிரும்ம சாஷாத்காரம் ஏற்படும் உடனே அவர்கள் நிர்குணப் பிரும்மத்தில் அடங்குவர்.*

***வினா :- உயிர் நீங்கும் வரை ஸர்வாத்மபாவம் ஏற்படாதவர்களுக்கு ஊழிக்காலத்தில் ஸர்வாத்மபாவம் ஏற்படுவதெவ்வாறு?***

*ஒடுங்குகின்றனவோ, அதையறிந்துகொள், அது பிரும்மம் என்று வேதங்களில் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறு மூவகைச் செயல்கள் இருப்பதனாலே தான், ஒரே பரம்பொருளுக்கு அயன், அரி, அரன் என்னும் பெயர்களும், உருவங்களும் கொள்ளப்பட்டன.*

***வினா :- இவ்வாறு வேறுபாடில்லை என்பதற்கு, உலக வியவஹாரத்தில் ஏதாவது உதாரணம் கூற முடியுமா?***

*விடை : முடியும்: உலகியலிலே கூட இராமனுக்கும் கண்ணனுக்கும் வேற்றுமையில். தென்முகக்கடவுளுக்கும், சிவபெருமானுக்கும் வேற்றுமையில்லை. ஆதலால், அரன், அரி முதலிய மூர்த்திகளை வேறுபடுத்தி ஆத்திரங்கொள்ள இடமில்லை.*

***வினா - தொண்டரடிப்பொடியாழ்வாரின் வாழ்க்கையில் ஒரு ஸம்பவம் தெரியுமா?***

*விடை :- தெரியும், தொண்டாடிப்பொடியாழ்வார், ஆழ்வார் பன்னிருவரில் ஒருவர். அவர் ஸ்ரீ ரங்கத்தில் அரங்கனைப் பாடிக்கொண்டிருந்தார். அவரிடம், சில அடியார்கள் வந்து, திருப்பதியிலிருக்கும் திருவேங்கடமுடையானைத் தாங்கள் பாடவேண்டு*

மென்று கோர, திருவேங்கடமுடையான் விஷ்ணுவே என்று அவர் அறிந்திருந்தும், அரங்கனைப் பாடிய வாயால் குரங்களைப் பாடமாட்டேன்' என்று கூறித் திருவேங்கடமுடையானைத் தூக்கியெறிந்துவிட்டார். அதனாலே தான் திருவேங்கடமுடையானுக்கு ஒரு ஆழ்வார் பாடல் குறைவு.

**வினா :- திருவேங்கடமுடையானக் குரங்கன் என்று கூறக் காரணம் என்ன?**

விடை - திருப்பதி மலையில் குரங்குகள் அதிகமாயிருப்பது தானாம்.

**வினா :- அபேத உண்மையினை அறிந்திருந்தும், தொண்டரடிப் பொடியாழ்வாரும், அவர் போன்ற சிலரும் பிடிவாதமாயிருப்பதற்குக் காரணமென்ன?**

விடை - அவரவர் உபாஸனமூர்த்தியிடமிருக்கும் அன்பு மேலீடுதான் காரணம்,

**வினா :- எல்லா ஆழ்வார்களும் இப்படித்தான் பிடிவாதம் கொண்டிருக்கிறார்களா ?**

விடை **:-** இல்லை. சாந்தம் மேலிட்ட சில ஆழ்வார்கள், ஹரிஹராத்வைதத்தையே வெள்ளிடை மலைபோல் விளக்கிப் பரம் பொருளை வழிபட்டிருக்கிறார்கள்.

**வினா : ஏதேனும் உதாரணம் உண்டா ?**

விடை - பொய்கையாழ்வார்.

*அன் நாரணன் நாமம் ; ஆன் விடை புள்ளூர் தி,*
*யுரைநூன் மறை; உறையுங் கோயில் - வரைநீர் ;*
*கரும மழிப்பளிப்புக் கையதுவே நேமி;*
*யுருவ மெரிகார்மேனி யொன்று* (முதற்றிருவர் தாதி, 5)

என்றும், பேயாழ்வார்

*'தாழ்சடையும் நீண்முடியும் ஒண் மழுவுஞ் சக்கிரமுஞ்*
*சூழரவும் பொன்னாணுந் தோன்றுமால் - சூழுந்*
*திரண்டருலி பாயுந் திருமலைமே லெந்தைக்*
*கிரண்டுருவு மொன்றா யிசைந்து* (மூன்றாம் திருவந்தாதி, 63)

என்றும் ஹரிஹராபேதத்தைத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.

(தொடரும்)

# கர்மபலன்

இப்பூமியில் ஜனித்த மனிதன் முதலியவைகளுடைய நிலை நவக்ரஹங்களைப் போல மாறிக்கொண்டே வருகிறது. கஷ்டம், சுகம்; துக்கம், ஸந்தோஷம், உயர்ந்த பதவி, தாழ்ந்த பதவி இப்படி எல்லோருடைய நிலை கொண்டிருக்கிறது. இப்படி மாறிக்கொண்டே இருப்பவன் மனிதன் மாறி மாறி வந்து மட்டும் அல்ல. எல்லாம் அப்படித்தான். பல ஸ்தாபனங்களும் அப்படியே !

லோகத்தில் நடக்கும் ஸுகதுக்கங்களுக்கும் கிரஹங்களுக்கும் ஸம்பந்தம் உண்டென்று நினைத்து, மஹரிஷிகள் இன்ன இன்ன மாதிரி கிரஹங்கள் இருந்தால் இன்ன இன்ன பலன் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு காரியம் ஆரம்பித்தால் அதன் ஆரம்ப கால கிரஹ அமைப்புகளைக்கொண்டு மேலே நடக்கும் ஸுக துக்க பலன்களைச் சொல்லிவிடலாம். நம் ஜனன காலத்தை ஆரம்பமாகக் கொண்டு பலன்களைச் சொல்கிறோம்.

ஆனால் ஸுகதுக்கங்களுக்குக் காரணம் பலவிதமாகச் சொல்லப்படுகிறது. வைத்தியர்கள் தாது வித்தியாஸத்தால் என்று சொல்லுவார்கள். தாதுக்களின் ஸம நிலையானது தப்பிவிட்டது. அதனால் தான் இந்த வியாதி உண்டாயிற்றென்று அவர்கள் சொல்லுவார்கள். மந்திரவாதி தெய்வக்கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறான். ஜ்யோதிஷன் கிரஹகதியால் அது வந்தது என்கிறான். தர்ம சாஸ்திரம் பூர்வ கர்மபலன் என்று சொல்லுகிறது. பயந்து கொண்டதனால் மனம் மாறி இருக்கிறது என்று மனோதத்துவ நிபுணர்கள் சொல்லுகிறார்கள். இப்படி காரணங்கள் சொல்லப்படுகின்றன. உண்மையில் கிரஹகதியால் வருகிறதா? மனதின் சலனத்தால் வருகிறதா? தாதுக்களால் வருகிறதா? மற்றவைகளால் வருகிறதா? இது ஸந்தேகமாகத்தான் இருக்கிறது, சில சமயங்களில் ஒருவன் அநுபவிக்கிற ஸுகதுக்கங்களுக்கு மற்றவருடைய புண்ணிய பாபங்கள் காரணம் என்றும் சொல்லுவ துண்டு. குழந்தைகளுக்கு ஏதாவது வியாதி வந்தால் மாதாபிதா செய்த பாபாலன் என்று சொல்லுகிறார்கள். குழந்தையின் பக்கத்திலிருந்து அவர்களும் துக்கத்தை அனுபவிக்க நேருகின்றதால் அப்படிச் சொல்லுவதும் நியாயந்தான். நமது உடம்புக்கு வியாதி வந்தால் அவற்றிற்க்குக் காரணம் நம்முடைய சத்துருவின் புண்ணியம் என் றும் சொல்லலாம். இப்படி ஒருவனுக்கு ஒரு துக்கம் வந்தால் அது அநேகருடைய பாப புண்ணியத்தால் வந்தது என்று சொல்லலாம். இவற்றில் ஒன்றும் பொய்யில்லை.

எல்லாம் காரணங்களே. எல்லாம் ஒன்றின் அடையாளங்களே. நாம் தெரிந்து கொள்வதற்காக இப்படிப் பல வகையிலும் காரணங்கள் ஏற்பட்டு ஒன்றாகக் கூடி அநுபவத்தைக் கொடுக்கின் றன. ஒவ்வொருவர் ஒவ்வொரு காரணத்தை எடுத்துக் கொள்ளுகிறார். மழை பெய்தால் ஈரம் உண்டாகிறது. ஈசல் உண்டாகிறது. தவளை கத்துகிறது. இவ்வளவும் மழை பெய்ததற்கு அடையாளங்கள். அதுபோல கர்மாவின் பலன் உண்டானதற்கு அநேக அடையாளங்கள் அமைகின்றன. ஒவ்வொன்றும் அடையாளந்தான். எல்லாவற்றிற்கும் ஸம்பந்தம் உண்டு. எல்லாம் ஒரு கர்மாவின் பலனாகவே உண்டாகின்றன.

இவ்விதமுள்ள கர்ம பலன்களைத் தெரிந்து கொள்ள ஜ்யோதிஷம் என்னும் கிரந்தம் மிகவும் உபயோகமாயிருக்கிறது. நாம் கடிதங்களில் ஊரையும் தேதியையும் எழுதுவதுபோல் ஸங்கல்பம் செய்து கொண்டு ஒவ்வொரு கர்மா செய்யுங்காலத்தில் தேசத்தையும் காலத்தையும் சொல்லிக் கொள்ளுகிறோம். இந்த அருமையான காலக் கணக்குகள் ஜோதிடசாஸ்திரத்தாலேயே அறியப்படுகின்றன. மற்ற சாஸ்திரங்களிலெல்லாம் வாக்கியார்த்தம் செய்து ஸம்மானம் பெறலாம். ஜ்யோதிஷ சாஸ்திரத்திலோ பிரத்தியக்ஷமாகக் காட்டி ஸம்மானம் பெறவேண்டும். சூரிய சந்திரர்களே ஸாக்ஷி.

ஜ்யோதிஷம் முதலியவைகளைத் தெரிந்துகொண்டு அதற்கு அங்கியான வேதத்தையும் அத்யயனம் பண்ணி அதிலுள்ள தத்வார்த்தங்களையும் நன்கு அறிந்துகொள்வதினால் நல்ல கர்மாக்களை முறைப்படி பண்ண ஹேதுவாகும்.

எந்தக் கர்மாவை, எப்படிப் பண்ணுவது, எந்தெந்த ஆசிரமத்தார், எதெதைச் செய்ய வேண்டியது, எந்தக் கர்மாவுக்கு என்ன மந்திரம், திரவியம், தேவதை என்பவைகளையும் இவைபோன்ற மற்றவைகளையும் சொல்வதே கல்பம் எனப்படும். கல்பத்தில் சொல்லும் பிரகாரம் கர்மாக்களைச் செய்து அவைகளின் பலனில் விருப்பம் கொள்ளாமல் முக்கரண சுத்தியோடு ஈசுவரரார்ப்பணம் செய்வதே இவ்வுலக, மறு உலகங்களிலும் நன்மையைளிக்கும்.

# ஸ்ரீமத் பாகவதம் காட்டும் வாழ்க்கை நெறி 3

*ராமாயணம் ஸ்ரீனிவாசன்*

# நல்ல இல்லறத்தான்

எந்த இல்லத்தான் வீட்டில் தூய்மையான நீர், பாய், உட்கார நல்ல இடம் இருந்து அவனும் நல்ல மனம் படைத்தவனாயிருந்து மகான்கள் ஏதாவது ஒரு பொருளைப் பெற்றுச்செல்வரோ அந்த இலாத்தாந்தான் ஏழையாக இருந்தாலும் தனவான்.

துஷ்ட வீடு, செல்வம் நிறைந்த வீடாய் இருந்தாலும் அந்த வீட்டிற்கு அடியார்கள் வந்து தூய்மை படுத்தவில்லையோ அவ்வீடு பாம்புகள் குடியிருக்கும் புற்றே.

பிறவி வரும் முறை முன் பிறவி, கர்மவினை யாவும் நீங்கி இனி பிறவி இல்லை எனும் நிலை வரும்வரை இம்மனம் மனிதனுக்கு பிறவிகளை ஏற்படுத்தும். மனமே பிறவிகளுக்குக் காரணம்.

விடுதலைக்கு வழி ஆகவே இக்கர்மவினையிலிருந்து முழுமையாக விடுதலை பெற பகவான் ஹரியை முழு மணத்துடன் ஆராதிக்க வேண்டும். இப்ப்ரபன்சமே அவர்தான் என்ற எண்ணம் கொள்ள வேண்டும். அவர்தான் இதைப் படைத்து, காத்து, அழிப்பவர்.

வீணான பிறவி சோம்பேறி, அறிவில்லாதவன், அற்பாயுள் கொண்டவன் இவர்களின் ஆயுள் இரவில் தூக்கத்திலும், பகலில் தேவையற்ற பயனில்லாத செயல்களிலும் கழிகிறது.

நினைவே போறும் கலி யுகத்தில் புண்யகர்மாக்களை செய்ய நினைத்தாலே போறும். நற் பயன் கிடைத்துவிடும். தீய செயல்கள் ஆற்றினால்தான் பயன் கொடுக்கும்.

பிறவியை பகவான் கொடுப்பதன் நோக்கம் 5-1-13 பிறப்பதற்கும் இறப்பதற்கும் லௌகிக மற்றும் வைதிக கார்யங்களைச் செய்வதற்கும் அதனால் வரும் இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்கும் உலகைக் கண்டு மயங்கியும், பின்பு அதைக்கண்டு பயந்து துயருற்று முக்தி பெற இவ்வுடலைப் பெற்றேனே என மனம் தேறி அதனால் இன்பம் பெற பகவான் இப்பிறவியைத் தந்துள்ளார்.

நற்பிறவி பகவானை பூஜிப்பதில் ஈடுபாடு அற்றவன், புலன் அடக்கம் இல்லாதவன் காடுகளில் திரிந்து என்ன பயன்?பிறப்பு இறாப்பு பயம் அவனை துன்புறுத்தும். இதற்கு மாறாக பகவானிடம் பக்தி கொண்டவன் புலனடக்கம் கொண்டவன் இல்லறத்தில் இருந்தாலென்ன? காட்டில் இருந்தாலென்ன? அவனை எதுவும் பாதிக்காது.

சான்றோர்கள் யார்? தீயவழியை பின்பற்றாதவர்கள், நல்வழி கொண்டு மனதை தன்வழிக்குக் கொணர்ந்தவர்கள் காமம் கோபம் இல்லாதவர்கள் யாவரிடமும் ஸமபாவனை கொண்டவர்கள். இவ்வுடலை பேணிக்காப்பதிலேயே வீண்காலம் போக்குபவர்கள், பனம் மனைவி வீடு மக்கள் இவற்றில் ஆசைகொண்டவர்கள் இவர்களுடன் தொடர்பு அற்றவர்கள் உலகியல் கடமையைச் செய்ய உடல் தேவை என்பதால் அதற்குத் தேவையான பொருள் தேட முயல்பவர்கள் பகவத் பக்தியே முக்யம் என்று வாழ்பவர்கள் சான்றோர்கள்.

(தொடரும்)

லோகம் பூராவுமே, இந்த வைதீக ஸனாதன தர்மம், அப்டீங்கறது இருந்திருக்கு. இதனுடைய ஆசாரங்களும், இதனுடைய அடையாளங்களும், இதனுடைய அபிப்ராயங்களும், வெவ்வேற இடத்துல, வேற வேற ரூபத்துல தெரியறது.

தர்மத்துல அழகு உண்டு. தர்மங்கறது, அழகுக்காகவோ, ஆடம்பரத்துக்காகவோ, ஏற்பட்டது இல்ல. ஆசாரத்துக்காகவும், அபிமானத்துக்காகவும், ஆரோக்கியத்துக்காகவும் ஏற்பட்டதுதான் தர்மமே வொழிய, வெளில காம்பிக்கறதுக்காக அல்ல.

எல்லாராத்துலையும், இந்த கர்ம, பக்தி, ஞான மார்க்கத்த பத்தின தெளிவு, அதுக்கான விஸ்வாஸம், அதுக்கான ஸங்கல்பம், அதுக்கான ஸஹகாரம், ஸத்காரம், அதுக்கு வேண்டிய ஸர்வகாரம், எல்லாம் வரத்துக்கு காரமில்லாம எல்லாரும் வேல செய்யணும், ப்ரியமா வேல செய்யணும், ஸௌஜன்யமாக எல்லாரும் வேல செய்யணும்.



# தத்வ சிந்தனை

இளம்பூரணர்

*‘‘ருசோ அக்ஷரே பரமே வ்யோமன் யஸ்மின் தேவா அதி விஸ்வே*

*நிஷேது: யஸ்தன் ந வேத கிம் ருசா கரிஷ்யதிந ய இத் தத் விது;ஸ இஹ ஸமாஸதே‘‘*

*அக்ஷர ப்ரம்மத்தில் வானில் தேவத்தன்மை நிலை பெற்று உள்ளது. அந்த அக்ஷரப்ரம்மத்தை உணராமல் ரிக் வேதம் ஓதி என்ன பயன்?*

*அதை அறியும் மனிதன் அமைதியில் உறைகிறான். இதி ப்ரசித்தி பெற்ற ரிக் வேத மந்த்ரம். பல விஷயங்களை கூறும் இப்போது நாம் காணும் உலகம் யாவும் அழியாத ஒரு தத்துவத்தைச் சார்ந்தே உள்ளது. அது இல்லாமல் எதுவும் இயங்காது.*

*‘‘ஜன்மாத்யஸ்ய யத:‘‘ என்று ப்ரம்மஸுத்ரம் கூறும். வாழ் நாள் நுழுவதும் எதையோ தேடி ஓடிக் கொண்டிருக்கும் நாம் ஆதாரமான விஷயத்தைப் பற்றி நினைப்பதே இல்லை. எந்த நினைப்புக்கும் அதுவே காரணம்.*

*அக்ஷரமானது அழிவு இல்லாதது என்ரு பொருள். அந்த அக்ஷரத்திலேயே தேவர்கள் நிலை கொண்டுள்ளனர். சரி. அதனால் என்ன?அதை அறிவதுதான் மனிதனின் தலையாயக் கடமை. சத் சித் ஆனந்தமான பரமாத்மாவை அறியாமல் வேறு படிப்புகள் வீணே. அதை ஆத்ம தத்வத்தை உணராமல் வேதம் ஓதி என்ன பயன்? இதை அந்த வேதமே கூறும். சதுர் வேதங்களில் எத்தனை மந்த்ரங்கள். எவ்வளவு அர்த்த புஷ்டியானவை. ஓத ஒத ஆனந்தம். கேட்க க் கேட்க பரவசம். உண்மை . பரமாத்மாவவை உணராமல் இந்த படிப்பினால் என்ன பயன்?*

*படிப்பின் பயனே அவனை உனர்வதுதான். திருக்குறளில் வள்ளுவப் பெருமான் கூறுவதும் இதையேதான். சற்று ஆச்சர்யமாக இருக்கும். முதல் குறள் இந்த உலகுக்கு ஆதிபகவன் தான் முதல் அவனைச் சார்ந்துதான் இவ்வுலகம் இயங்கும்.*

**‘‘அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன்**
**முதற்றே உலகு‘‘**

*மாறாத பொருள் ஆதிபகவன்.சரி. வள்ளுவர் இத்துடன் நிற்கவில்லை. அடுத்த குறளில் கூறுகிறார்.*


**''கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்''**

நாம் காட்டியதுபோல் இறைவனை உணராத படிப்பினால் என்ன பயன் என்று கேட்கிறார். ஒரு வேறுபாடு. அவர்காட்டுவது ஸகுணப்ரம்மம். இறைவனது தாள்கள் என்று சொன்னாலும் படிப்பு அவனை உணர வைக்க வேண்டும் என்பதுதான் தாத்பர்யம்.

எனவே வேதமும் குறளும் ஒரே நோக்கத்தில் பயணிக்கின்றன. இரண்டும் ஸமம் என்பது தெரிகிறது.இதை திருவள்ளுவமாலை உணர்த்தும்.

**''ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்த்திதனினிது**
**சீரிய தென்றொன்றைச் செப்பரிதால் ஆரியம்**
**வேதமுடைத்துதமிழ் ஓது குறட்பாவுடைத்து''**

வேதம் என்ன சொல்கிறதோ அதையே குறளும் எதிரொலிக்கிறது என்பதில் ஐயமில்லை. இதற்குப் புறம்பாகப் பேசுபவர்கள் இதை கவனத்தில் வைக்க வேண்டும். முடிவாக எத்தனைப் படிப்பு படிப்பினும் தேவை இறை சிந்தனை.இறை சிந்தனைஅல்லது இறைவனை உணராமல் படிப்பு வீணே.



அம்பாளுடைய அனுக்ரஹத்தினாலே, வித்யை, ஆரோக்யம், ச்ரத்தா, லக்ஷ்மீகடாக்ஷம், இப்படி, பல்வேறு ஸௌக்கியங்களை பக்தர்கள் பெறுகிறார்கள்.

இப்படி அனைத்து, ஐச்வர்யங்களையும், அனைத்து சக்திகளையும் பெறுவதற்கு, லலிதாஸஹஸ்ர நாமம், அம்பாளுடைய ஸ்தோத்ரங்கள், அம்பாள் ஸம்பந்தப்பட்ட உபாஸனையை, மேற்கொள்ள வேண்டும்.

# ஸனாதன தர்மம் :

ரா ஸ்ரீ

**118. கேள்வி : விபூதியின் பெருமை என்ன ?**

விபூதி ரைஸ்வர்யம் என்னும் மந்திரமாவது நீறு என்றும் போற்றப்படுவது.




**119. விபூதியை எங்கனம் இட்டுக் கொள்ள வேண்டும்?**

**பதில் :** காலையில் நீரில் குழைத்தும், பகலில் சந்தனத்துடன் கலந்தும் சாயங்கா லத்தில் வெறும் விபூதியாக அணியலாம்.

120. **கேள்வி : விபூதி எப்படி தரிக்கப்படும்?**

**பதில் :** க்ரஹஸ்தர்கள் ஜலத்தில் குழைத்து இட்டுக் கொள்ள வேண்டும். யதிகள் அப்படியே இட்டுக்கொள்ளலாம் வலக் கையில் மூன்று விரல்களால் இட்டுக் கொள்ள வேண்டும். விபூதி இல்லாமல் செய்யப்படும் ஹோமம்,ஜபம் தேவ பூஜை எல்லாம் வீண்.

121. **கேள்வி : விபூதியை எங்கெல்லாம் உடலில் தரிக்கவேண்டும்?**

பதில் : நெற்றியில், இதயத்தில், தொப்புள் ப்ரதேசத்தில், கழுத்தில் இவைகளின் சேர்க்கை இடங்களில் நின்பகுதியில் தலையில் இட்டுக்கொள்ள வேண்டும்.

122. **கேள்வி : விபூதி எவ்வளவு நீளம் இருக்க வேண்டும்?**

**பதில் :** 4 அங்குலத்திலிருந்து 6 அங்குலம் வரையில் இருக்கலாம்.

123. **கேள்வி : ருத்ராக்ஷத்தின் மகிமை என்ன?**

**பதில் :** எவர் உடம்பில் ருத்ராக்ஷமும் நெற்றியில் விபூதியும் உள்ளதோ அவர் சண்டாளனாயிருப்பினும் பூஜனீயரே.எல்லா வர்ணத்தாரைக் காட்டிலும் மேன்மையானவர்.

124. **கேள்வி : ஜபத்திற்கு சிறந்த மாலை எது?**

**பதில் :** பவளம், முத்து, ஸ்படிகம், துளசி இவைகள் ஏற்றவை.

125. **கேள்வி : ஆசமனம் எத்தனை வகை?**

**பதில் :** ஆறு வகைப்படும். சுத்த, ஸ்மார்த்த, பௌராணிக, வைதிக, தாந்த்ரிக ஸ்ரௌதம்.

126. **கேள்வி : சுத்த ஆசமனம் என்றால் என்ன?**

**பதில் :** மல, மூத்ர விஸர்ஜனத்தின் பின் செய்யப்படுவது

127. **கேள்வி : ஸ்மார்த்த ஆசமனம் விளக்குக**

**பதில் :** ஸந்த்யா காலத்தில் செய்யப்படும் ஆசமனம் ஸ்மாரத்த ஆசமனம் எனப்படும்.பௌராணிக கர்மாக்கள் செய்யும் போது செய்யப்படும். ஆசமனம் ஸ்மார்த்தபௌராணிக ஆசமனம் எனப்படும்.

128. **கேள்வி : வைதிக ஆசமனம் என்பது என்ன ?**

**பதில் :** ப்ரம்ம ய்ஞ்யம் செய்யும் போது செய்யப்படுவது.

129. **கேள்வி : வைதிக ஆசமனம் என்பது என்ன ?**

**பதில் :** ப்ரம்ம யக்ஞ்யம் செய்யும் போது செய்யப்படுவது.

130. **கேள்வி : தான்த்ரிக ஆசமனம் என்பது என்ன?**

**பதில் :** அஸ்த்ரங்கள் பயிலும்போது செய்யப்படுவது.

131. **கேள்வி : ஜலம் கிடைக்காத போது ஆசமனம் செய்வது எப்படி ?**

**பதில் :** வலக் காதைத் தொட்டால் ஆசமனம் செய்ததாகும்.

132 **கேள்வி : ஏன் வலக்காது?**

**பதில் :** வலக்காதில் கங்கை, அக்னி, வேதம், சந்த்ர ஸூர்யர் என்று தேவதைகள் இருப்பதால் ஆசமன பலன் கிடைக்கும்.

(தொடரும்)